# ஆண்டறிக்கை 2020


ஆண்டறிக்கை 2020இல் பிரதிபலிக்கப்பட்டவாறு

## இலங்கைப் பொருளாதாரத்தின் நிலை, சவால்கள் மற்றும் தோற்றப்பாடு

1950-2020 Stability Sustainability Shared Prosperity

முனைவர். (திருமதி.) சுஜீதா ஜெகஜீவன்
மேலதிகப் பணிப்பாளர் - பொருளாதார ஆராய்ச்சித் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி

# நியதித் தேவைப்பாடு




**இது 2020ஆம் ஆண்டிற்கான இலங்கை மத்தியவங்கியின் நாணயச் சபையின் 71ஆவது ஆண்டறிக்கையாகும்**

***நாணயவிதிச் சட்டத்தின் 35ஆம் பிரிவு:***

…ஒவ்வொரு நிதியாண்டும் முடிவடைந்து நான்கு மாதங்களுக்குள், நாணயச் சபையானது நிதித் துறைக்குப் பொறுப்பான அமைச்சரிடம் மத்தியவங்கி நிலைமை, நிதியியல் ஆண்டுப்பகுதியில் நாணயச் சபையினால் மேற்கொள்ளப்பட்ட கொள்கைகள் மற்றும் வழிமுறைகளின் ஆய்வினையும் அக்கொள்கைகளையும் வழிமுறைகளையும் தூண்டிய பொருளாதார மற்றும் நிதியியல் சூழல்கள் பற்றிய ஆய்வுகள் மீதான ஆண்டறிக்கையொன்றைச் சமர்ப்பிக்கவும் அதனை வெளியிடவும் வேண்டும்…

# ஆண்டறிக்கையின் உள்ளடக்கம்

| | | |
|---|---|---|
| தொகுதி I | பகுதி I | - பொருளாதாரத்தின் நிலை, அதன் செயலாற்றம், கொள்கைகள் மற்றும் பிரச்சனைகள்<br>புள்ளிவிபரப் பின்னிணைப்பு<br>சிறப்பு புள்ளிவிபரப் பின்னிணைப்பு |
| தொகுதி II | பகுதி II | - இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும் |
| | பகுதி III | - ஆண்டுப்பகுதியில் அரசாங்கத்தினாலும் நாணயச் சபையினாலும் இலங்கை மத்திய வங்கி மற்றும் வங்கித்தொழில் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நிருவாக வழிமுறைகள் |
| | பகுதி IV | - 2020ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியினதும் இலங்கையிலுள்ள வங்கித்தொழில் நிறுவனங்களினதும் செயற்பாடுகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பான சட்டவாக்கங்கள் |



1950-2020 Stability Sustainability Shared Prosperity

# பகுதி I - பொருளாதாரத்தின் நிலை, அதன் செயலாற்றம், கொள்கைகள் மற்றும் பிரச்சனைகள்

1. பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்
2. தேசிய வெளியீடு, செலவினம், வருமானம் மற்றும் தொழில்நிலை
3. பொருளாதார மற்றும் சமூக உட்கட்டமைப்பு
4. விலைகளும் கூலிகளும்
5. வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்
6. இறைக்கொள்கையும் அரச நிதியும்
7. நாணயக் கொள்கை, வட்டி வீதங்கள், பணம் மற்றும் கொடுகடன்
8. நிதியியல் துறைச் செயலாற்றம் மற்றும் முறைமை உறுதித்தன்மை




# பொருளாதார, விலை மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாடு, தோற்றப்பாடு மற்றும் கொள்கைகள்

*அரசாங்கம் மற்றும் மத்திய வங்கியின் எப்போதுமில்லாதவாறான கொள்கைத் தலையீடுகளின் மூலம் 2020 இல் இலங்கைப் பொருளாதாரம் எதிர்நோக்கிய சிக்கலான சவால்கள் செயற்றிறனாகத் தீர்க்கப்பட்டன.*

*கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் கசிவு விளைவுகளின் சமூகப்பொருளாதாரத் தாக்கம் மற்றும் இதன் விளைவான குடியிருப்பாளர்கள் மற்றும் தொழில்முயற்சிகள் மீதான நீடித்த வடு போன்றவற்றை மட்டுப்படுத்துவதற்கு இந்தத் தலையீடுகள் அவசியமாகவிருந்தன.*

*பொருளாதாரத்தின் மீதான நம்பிக்கையை பேணுவதற்கும் இதன் மூலம் பேரண்டப்பொருளாதார மற்றும் நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் மீதான கடுமையான அழுத்தங்களைத் தவிர்ப்பதற்கும் இவ்வகையான தலையீடுகள் தேவைப்பட்டன.*


# 2020இன் ஆரம்பத்தில் இலங்கைப் பொருளாதாரம்…

*உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பேரழிவு விளைவுகள் மற்றும்*

*…2019இன் தளம்பலடைந்திருந்த அரசியல் சூழலினை அனுபவித்ததன் பின்னர்…*


2020இன் ஆரம்பத்தில் இலங்கைப் பொருளாதாரம் மீட்சிப் பாதையை நோக்கி காணப்பட்ட அதேவேளை

*2019இன் இறுதியை நோக்கியதான மேம்பட்ட அரசியல் உறுதிப்பாடு மனோபாவங்களில் கணிசமான அதிகரிப்பொன்றிற்கு இட்டுச்சென்றிருந்தது*




உண்மை மொ.உ.உ வளர்ச்சி (%)

மூலம் : தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்




Source: LMD

# 2020இன் ஆரம்பத்தில் காணப்பட்ட சவால்கள்...

- **பல ஆண்டுகளாக காணப்பட்ட குறைந்தளவான வளர்ச்சிக்குப் பின்னர் பொருளாதார வளர்ச்சியை மீட்சியடையச் செய்வது இலங்கையால் முகங்கொடுக்கப்பட்ட முக்கிய சவாலொன்றாக 2019இன் இறுதியில் காணப்பட்டது.**

- **அதற்கிணங்க, அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி ஆகிய இரண்டும் பொருளாதாரத்தை மீட்சியடையச்செய்வதனை நோக்கிய கொள்கைகளின் மீது கவனம் செலுத்தியிருந்தன**
  - இறைக்கொள்கையானது குறைந்தளவான அரசிறை அமையச் செலவினங்களிற்கு மத்தியில் வியாபாரங்கள் மற்றும் வளர்ச்சி என்பவற்றிற்கு ஆதரவளிப்பதனை நோக்காகக் கொண்டிருந்தது.
  - குறைந்தளவான பணவீக்க சூழலில் தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கையானது வளர்ச்சிக்கு அதரவளிக்கும் வகையில் தொடருமென எதிர்பார்க்கப்பட்டது

- **வளர்ச்சிக்கு சார்பான கொள்கைச் சூழலுக்கு ஆதரவளிப்பதற்கு நீண்டகால அமைப்பியல் ரீதியான பிரச்சனைகளை தீர்த்தல் மற்றும் உள்நாட்டு உற்பத்தியை மேம்படுத்தல் என்பன அவசியமானவைகளாகும்**

***எனினும், கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் பரவல் மற்றும் அதனுடன் தொடர்புடைய கட்டுப்படுத்தல் வழிமுறைகள் பொருளாதாரத்தின் அனைத்து ஆர்வலர்கள் மற்றும் பொருளாதார மீட்சிச் செயன்முறை என்பவற்றின் மீது மோசமான கடினத்தன்மைகளை விளைவித்திருந்தன.***

# உலகளாவிய நோய்த்தொற்று மற்றும் அவற்றின் விளைவுகளை எதிர்த்து போராடுவதற்காக அரசாங்கம் மற்றும் மத்திய வங்கி என்பன பல கொள்கை மற்றும் தொழிற்பாட்டு வழிமுறைகளை எடுத்திருந்தன…

## சுகாதார மற்றும் சமூக வழிமுறைகள்

- பயணங்களுடன் தொடர்புடைய கட்டுப்பாட்டு வழிமுறைகள்
- பி.சி.ஆர் மற்றும் விரைவான அன்டிஜன் பரிசோதனைகள்
- சுகாதார நல வசதிகளை வழங்கல்
- சமூக விழிப்புணர்வு நிகழ்ச்சித்திட்டங்கள்
- செயற்றிறனான தடுப்பூசி நிகழ்ச்சித்திட்டங்கள்

## நாணய, நிதியியல் மற்றும் ஏனைய வழிமுறைகள்

- இறைத்தூண்டுதல்கள் மற்றும் தேவைப்படும் குடும்பங்களுக்கான நிதியியல் உதவிகள்
- நாணயக்கொள்கை தளர்த்தல் வழிமுறைகள்
- தொழிற்பாட்டு மூலதன கடன்கள்
- கட்டடவாக்கம் மற்றும் ஏனைய துறைகளுக்கான திரவத்தன்மை வசதிகள்
- கடன் தவணைக்கொடுப்பனவுகளின் சட்ட இசைவுத் தாமதம் மற்றும் நிதியியல் துறை ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகள்

# இத்தகைய அசாதாரணமான கொள்கைத் தலையீடுகள் 2020இல் சிக்கலான சவால்களை வினைத்திறனாக தீர்ப்பதற்கு உதவியிருந்தன...

கொவிட்-19 நோய்த்தொற்றின் முதலாவது மற்றும் இரண்டாவது அலைகள் ஒப்பீட்டளவில் குறைந்தளவான இறப்புக்களுடன் வெற்றிகரமாக முகாமை செய்யப்பட்டன...

அரச மற்றும் தனியார் துறையினர் வீட்டிலிருந்தான பணி செய்தல் நடைமுறைகளைப் பின்பற்றியிருந்ததுடன் நோய்த்தொற்றின் மீள் எழுச்சிக்கு எதிரான தாக்குபிடிக்கும் தன்மையை முன்னேற்றியிருந்தன...

கடன் தவணைக்கொடுப்பனவுகளின் சட்ட இசைவுத் தாமதம், குறைந்த செலவுடைய நிதியிடலை அணுகுவதில் ஏற்பட்ட முன்னேற்றம் அதேபோன்று குறைந்த வரிச் சூழல் என்பவற்றின் காரணமாக வியாபாரங்கள் மற்றும் தனிநபர்கள் சவால்களை எதிர்கொள்ள முடிந்தது...

ஆண்டின் இறுதிக்காலாண்டில் இரண்டாம் அலையின் காரணமாக ஏற்பட்ட மீட்சிச் செயன்முறையின் மீதான தடங்கல்களுக்கு மத்தியில் 2020இன் இரண்டாம் அரைப்பகுதியில் பொருளாதாரம் வலுவான மீட்சி அறிகுறிகளை காட்டுவதற்கு ஆரம்பித்திருந்தது...

இருப்பினும், முன்னோக்கி பார்க்கையில் கணிசமான பேரண்டப் பொருளாதார சவால்கள் காணப்படுகின்றன

- நோய்த்தொற்றின் மீளெழுச்சி மற்றும் அவற்றின் பொருளாதார வீழ்ச்சியை முகாமை செய்தல்
- வரையறுக்கப்பட்ட உட்பாய்ச்சல்களுக்கு மத்தியில் குறிப்பிடத்தக்க வெளிநாட்டு படுகடன் பணிக்கொடுப்பனவுகளை முகாமை செய்தல்
- தொலைதூர சீர்த்திருத்தங்கள் ஊடாக உள்நாட்டுப் பொருளாதாரத்தை வலுப்படுத்தல்
- மீட்சிச் செயன்முறை நிறைவடைந்ததுடன் இறை மற்றும் நாணயக் கொள்கை ஆதரவுகளின் சரியான நேரத்தில் மீளப்பெறுவதனை முகாமை செய்தல்

# 2020இல் இலங்கைப் பொருளாதாரம்

**உண்மை மொ.உ.உ -3.6%**

முதலீட்டு செலவினம்

| 2019 | தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி (மொ.உ.உ %) | 2020 |
|---|---|---|
| -2.1 | | -1.4 |

தேறிய வெளிநாட்டு கேள்வி -3.5% இனால் சுருக்கமடைந்திருந்தது

வணிக ஏற்றுமதிகளின் வீழ்ச்சி

வணிக இறக்குமதிகளின் வீழ்ச்சி


**வர்த்தக பற்றாக்குறை**

வெளிநாட்டு நேரடி முதலீட்டு உட்பாய்ச்சல்கள் மிதமடைந்திருந்ததுடன் சொத்துப்பட்டியல் வெளிப்பாய்ச்சல்கள் தொடர்ந்தன

சுற்றுலாத் துறை


தொழிலாளர் பணவனுப்பல்கள் கனிசமானதொரு மீட்சியைப் பதிவுசெய்திருந்தன

## தொழிலின்மை




**முதன்மைப் பணவீக்கம்**

பெரும்பாலும் விரும்பப்பட்ட மட்டத்திற்குள் காணப்பட்ட அதேவேளை மையப் பணவீக்கமானது குறைந்த மட்டத்தில் காணப்பட்டது..





*தலைக்குறிய மொ.உ.உ (ஐ.அ.டொ)*

**3,852** (2019)

**3,682** (2020)


ஐ.அ.டொ. இற்கெதிராக இலங்கை ரூபாவின் பெறுமதித் தேய்வானது 2020இல் 2.6%இற்குள் கட்டுப்படுத்தப்பட்டது




மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்

ஐ.அ.டொ. 7.6 பில் 2019

ஐ.அ.டொ. 5.7 பில் 2020




கொள்கை வீதங்கள் 250 அடிப்படை புள்ளிகள்

நியதி ஒதுக்கு விகிதம் 300 அடிப்படை புள்ளிகள்

வங்கிவீதம் 650 அடிப்படை புள்ளிகள்

சலுகைக் கடன் நிகழ்ச்சித் திட்டங்கள்

அரசிற்கு தேவையான நிதியிடல்களை வழங்கியிருந்தது

தனியார் துறைக் கடன்

அரச துறைக் கடன்

$M_{2b}$

நிதியியல் முறைமை உறுதிப்பாட்டின் பேணலை நிச்சயப்படுத்தியிருந்தது.

## ஒட்டுமொத்த அரச வரவுசெலவுத்திட்ட பற்றாக்குறை (மொ.உ.உ %)

| | 2019 | 2020 |
|---|---|---|
| ஒட்டுமொத்த பற்றாக்குறை | -9.6 | -11.1 |
| அரசிறை | 12.6 | 9.1 |
| மீண்டெழும் செலவு | 16.1 | 17.0 |
| மூலதன செலவு | 6.1 | 3.3 |

சாதகமற்ற உலகளாவிய நிதியியல் சந்தை நிலைமைகள் மற்றும் நாட்டிற்கான தரமிடல் முகவர் நிறுவனங்களினால் இலங்கைக்கான தரமிடல் குறைக்கப்பட்டமை என்பவற்றிற்கு மத்தியில் வெளிநாட்டு நிதியிடல்களின் அணுகுவழி வரையறுக்கப்பட்டிருந்தது...

*வெளிநின்ற மத்திய அரச படுகடன் (மொ.உ.உ.%)*

**86.8** (2019)

**101.0** (2020)

*மொத்த மத்திய அரச படுகடனிற்கான வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடனின் சார்புப் பங்கு (%)*

**47.6** (2019)

**40.0** (2020)

*...2020இல் வரவு செலவுத்திட்ட பற்றாக்குறைக்கான நிதியீட்டம் உள்நாட்டு மூலங்களால் தீர்க்கப்பட்டிருந்தது.*



1950-2020 Stability Sustainability Shared Prosperity 70




தேசிய உற்பத்தி,
செலவினம், வருமானம்
மற்றும் தொழில்நிலை,


பொருளாதார மற்றும்
சமூக உட்கட்டமைப்பு

மற்றும்

விலைகளும் கூலிகளும்

# கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவுகளைப் பிரதிபலிக்கும் வகையில் 2020இல் இலங்கையின் பொருளாதாரம் சுருக்கமடைந்தது...

### துறைரீதியிலான வளர்ச்சி வீதம் (அ)




(அ) தரவானது மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 அடியாண்டு)

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### வேளாண்மை துறை:

↓
மீன்பிடி
எண்ணெய்ப்பசை கொண்ட பழவகைகளின் வளர்ப்பு
தேயிலை வளர்ப்பு
காடாக்கலும் குத்திகளும்
விலங்கு உற்பத்தி

↑
காய்கறிகள் வளர்ப்பு
அரிசி வளர்ப்பு
தானியங்களின் வளர்ப்பு (அரிசி நீங்கலாக)
பழவகைகளின் வளர்ப்பு

### கைத்தொழில் துறை:

↓
கட்டடவாக்கம்
புடவை மற்றும் அணியும் ஆடைகளின் தயாரிப்பு
தோல் மற்றும் தோலுடன் தொடர்புபட்ட உற்பத்திகளின் தயாரிப்பு
சுரங்கமகழ்தல் மற்றும் கல்லுடைத்தல்

↑
உணவு, குடிபானம் மற்றும் புகையிலை உற்பத்திகளின் தயாரிப்புக்கள்

### பணிகள் துறை:


↓
களஞ்சியப்படுத்தல் உள்ளடங்கலான பொருட்கள் மற்றும் பயணிகளின் போக்குவரத்து
ஏனைய தனியாள் பணிகள்
தங்குமிட வசதி, உணவு மற்றும் குடிபானப் பணி நடவடிக்கைகள்

↑
நிதியியல் பணிகள் மற்றும் துணை நிதியியல் பணிகள்
தொலைத்தொடர்பு
மொத்த விற்பனை மற்றும் சில்லறை வர்த்தகம்

| பொருளாதார நடவடிக்கை | ஆண்டு வளர்ச்சி வீதம் % | |
|---|---|---|
| | 2019 | 2020 |
| வேளாண்மை, காடாக்கல் மற்றும் மீன்பிடித்தல் | 1.0 | -2.4 |
| கைத்தொழில் | 2.6 | -6.9 |
| பணிகள் | 2.2 | -1.5 |
| உற்பத்தி மீதான மானியங்களை கழித்த வரிகள் | 2.4 | -8.0 |
| **மொ.உ.உற்பத்தி** | **2.3** | **-3.6** |

*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

### மொத்த பெறுமதி சேர்ப்பிற்கான பங்களிப்பு





- **ஆண்டின் இரண்டாம் காலாண்டில் ஏற்பட்ட ஆண்டுக்காண்டு அடிப்படையிலான 16.4 சதவீத சுருக்கத்தினால் 2020இன் ஒட்டுமொத்தச் சுருக்கம் உந்தப்பட்டது**

# 2020இல் முதலீட்டுச் செலவினம் மற்றும் தேறிய வெளிநாட்டுக் கேள்வி வலுவிழந்த அதேவேளையில் நுகர்வுச் செலவினம் சிறிதளவில் வளர்ச்சியடைந்தது…

- **நடைமுறைச் சந்தை விலைகளில் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் செலவின அணுகுமுறையின் படி**
  - நடைமுறைச் சந்தை விலைகளில் 2019இல் 5.5 சதவீத சுருக்கத்தைப் பதிவுசெய்த மொத்த மூலதனவாக்கமானது (மொ.உ.உற்பத்தியில் 25.2%) 2020இல் 6.2 சதவீதத்தினால் மேலும் சுருக்கமடைந்தது
  - உலகளாவிய கேள்வியின் மெதுவடைவு, சுற்றுலாவைக் கடுமையாக பாதித்த எல்லை மூடல்கள் மற்றும் வெளிநாட்டுத் துறையின் அழுத்தங்களை தளர்த்தும் நோக்குடன் அமுல்படுத்தப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாடுகள் என்பவற்றின் ஒன்றிணைந்த விளைவைப் பிரதிபலிக்கும் வகையில் பண்டங்கள் மற்றும் பணிகளுக்கான தேறிய வெளிநாட்டுக் கேள்வியானது 2020இல் நடைமுறை விலைகளில் 3.5 சதவீதத்தால் சுருக்கமடைந்தது.
  - இருப்பினும், நுகர்வுச் செலவினமானது (மொ.உ.உற்பத்தியில் 81.1%) 2019இன் 7.4 சதவீத வளர்ச்சியுடன் ஒப்பிடுகையில் 2020இல் 2.1 சதவீத அதிகரிப்பொன்றைப் பதிவுசெய்தது

- **மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக உள்நாட்டுச் சேமிப்புக்கள் 2019இன் 20.7 சதவீதத்திலிருந்து 2020இல் 18.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தன**
  - தனியார் சேமிப்புக்கள் 10.0 சதவீதத்தால் அதிகரித்த போதிலும் அரச குறைச்சேமிப்பு உள்நாட்டுச் சேமிப்புக்களின் வீழ்ச்சிக்கு பங்களித்தது.
- **மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக தேசிய சேமிப்புக்கள் 2019இன் 24.7 சதவீதத்திலிருந்து 2020இல் 23.9 சதவீதமாக வீழ்ச்சியடைந்தன**
  - வெளிநாடுகளிலிருந்தான தேறிய நடைமுறை மாற்றல்களின் அதிகரிப்பு தேசிய சேமிப்புக்களின் வீழ்ச்சியை மட்டுப்படுத்த ஆதரவளித்தது
  - தேசிய சேமிப்புகளின் வீழ்ச்சியை விட முதலீடுகளில் ஏற்பட்ட கடுமையான வீழ்ச்சியின் காரணமாக தேசிய சேமிப்பு - முதலீட்டு இடைவெளி 2019இன் மொ. உ. உற்பத்தியின் சதவீதமாக -2.1 சதவீதத்திலிருந்து 2020இல் மொ. உ. உற்பத்தியின் சதவீதமாக -1.4 சதவீதத்திற்கு ஒடுக்கமடைந்தது

**சேமிப்பு, முதலீடு மற்றும் சேமிப்பு - முதலீடு இடைவெளி (மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக)**




*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் இலங்கை மத்திய வங்கி



1950-2020 Stability Sustainability Shared Prosperity 70

# கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் மட்டுப்படுத்தப்பட்ட பொருளாதார நடவடிக்கையை பிரதிபலிக்கும் வகையில் தொழிலின்மை வீதம் 2019இன் 4.8 சதவீதத்திலிருந்து 2020இல் 5.5 சதவீதமாக அதிகரித்தது...

- **தொழிற்படைப் பங்கேற்பு வீதமானது 2019இன் 52.3 சதவீதத்திலிருந்து 2020இல் 50.6 சதவீதத்திற்கு குறைவடைந்தது**
    - ஆண் தொழிற்படைப் பங்கேற்பு வீதம்: 73.0% → 71.9%
    - பெண் தொழிற்படைப் பங்கேற்பு வீதம் : 34.5% → 32.1%
- **தொழில்புரியும் குடித்தொகை 2019இன் 8.181 மில்லியனிலிருந்து 2020இல் 7.999 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தது.** தொழில்நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சிக்கு கைத்தொழில் மற்றும் பணிகள் தொழில்நிலையில் ஏற்பட்ட வீழ்ச்சிகள் முக்கிய காரணமாகும்


| தொழில்நிலையின் பங்கு | 2019 | 2020 |
|---|---|---|
| வேளாண்மை | 25.3% | 27.1% |
| கைத்தொழில் | 27.6% | 26.9% |
| பணிகள் | 47.1% | 46.0% |

## தொழிலின்மை வீதம் (%)




*மூலம்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

## தொழிற்சந்தைக் குறிகாட்டிகள்




# கொவிட்-19 சவால்களுக்கு மத்தியில் நலப் பணி வழங்கல்கள் மேற்கொள்ளப்பட்டன...

**கொவிட்-19 நோய்ப்பரவலின் இரு அலைகளையும் கட்டுப்படுத்துவதில் இலங்கை தீவிரமான சவால்களை எதிர்கொண்ட போதிலும் நலத் துறையினரதும் ஏனைய ஆர்வலர்களரதும் கூட்டான நடவடிக்கைகள் 2020 காலப்பகுதியில் நோயாளர்களின் எண்ணிக்கையினை முகாமை செய்யத்தக்க மட்டங்களில் பேணுவதற்கு நாட்டினை இயலச்செய்தன**

| | 2020 திசெம்பர் முடிவில் | 2020 மார்சு முடிவில் |
|---|---|---|
| தொற்றாளர்கள் | 43,299 | 92,706 |
| 1 மில்லியன் நபர்களுக்கு தொற்றாளர்கள் | 1,946 | 4,229 |
| இறப்பு வீதம் | 0.47% | 0.61% |
| தடுப்பு மருந்துகள் | - | 100 நபர்களுக்கு 4.2 தடுப்பு மருந்துகள் |

**கொவிட்-19 தொடர்பான கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் தொற்றா நோய் நோயாளர்களின் தேவைகளை பூர்த்தி செய்வதற்கு பொதுச்சுகாதார முறைமை புதுமையான முயற்சிகளை மேற்கொண்டது**

**கொவிட் - 19 தொற்று நோயாளர்களும் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர் பரிசோதனைகளும் (நாளாந்த எண்ணிக்கை)**




*மூலம்* : சுகாதார மேம்பாட்டுப் பணியகம்

**வைரசின் பரவலை செயற்திறனாக கட்டுப்படுத்தல், தாழ்ந்த இறப்பு வீதங்கள் மற்றும் பொருளாதார நடவடிக்கை விரைவாக வழமைக்கு திரும்புவது என்பவையை நலன் துறையின் ஆற்றல்மிக்க சேவை வழங்கல் இயலச்செய்தது.**

### அரச துறை



**வைத்தியர்கள்**
(1 வைத்தியருக்கான நபர்கள்)
**1,117**



**தாதியர்**
(1 தாதியருக்கான நபர்கள்)
**582**



**படுக்கைகள்**
(1,000 நபர்களுக்கான)
**3.5**

### ஆயுர்வேத துறை



**வைத்தியர்கள்**
(பதிவுசெய்யப்பட்டன)
**26,061**




**வைத்தியசாலைகள்**
**118**



**படுக்கைகள்**
**5,058**

### தனியார்துறை




**வைத்தியசாலைகள்**
**217**



**படுக்கைகள்**
**5,173**

# முன்னெப்பொழுதுமில்லாத சவால்களுக்கு மத்தியில் அரசாங்கம் அதன் கல்விப்பணி வழங்கல்களை தொடர்ந்தும் முன்னெடுத்தது...

பாடசாலைகள் மற்றும் பல்கலைக்கழகங்கள் அவ்வப்போது மூடப்பட்டமை மேல்மாகாணம் முழுவதும் நீண்ட காலம் மூடப்பட்டமையுடன் சேர்த்து 2020 மாச்சு தொடக்கம் கல்வி நடவடிக்கைகளைத் தொடர்ந்தும் முன்னெடுப்பதற்கு வசதியளிப்பதற்கு இ-தக்ஷலாவ, குருகெதர மற்றும் கற்றல் முகாமைத்துவ முறைமை போன்ற பல புத்தாக்கம்மிக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன

### கல்வியை தொடர் வதற்கான புத்தாக்க முயற்சிகள்



**புத்தாக்க கற்கைத் தீர்வுகளை பின்பற்றல்**

கலந்து செய்யப்பட்ட கற்கை முறைகள்

- குரு கெதர
- கல்வி தொலைக்காட்சி
- செயற்பாட்டு படிவங்கள
- கற்றல் மேலாண்மை அமைப்பு
  - 502,000 சூம் அமர்வுகள்
  - 22.3 இணையமூல பங்கேற்ப்புக்கள்



**தொடர்ச்சியாக நிர்வகித்தல்**

- கல்வியமைச்சின் தொடர்ச்சியான உடனடி பதிலிறுப்பு திட்டம்
- காலதாமதம் எற்பட்டாலும் அனைத்து தேசிய பரீட்சைகளும் நடாத்தப்பட்டது
- இணையவழி கற்கைகளுக்கான ஆசிரியர்களின் இயலளவை முன்னேற்றல்
- தொழில்நுட்பத்தின் அணுகல் தொடர்பான சமமின்மைகளை தீர்த்தல்

22.2% — கணினி அல்லது மடிக்கணனி உடமை

32.0% — கணனி அறிவு

கல்வி நடவடிக்கைகளை துரிதமாக டிஜிட்டல் தளங்களுக்கு மாற்றுவது பாராட்டக்கூடியதெனினும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களிலிருந்தான பிள்ளைகள், பின்தங்கிய பிரதேசங்களில் வாழும் பிள்ளைகள் மற்றும் தகவல் மற்றும் தொடர்பூட்டல் தொழில்நுட்ப வசதிகள் மட்டுப்படுத்தப்பட்ட அணுகலுடைய மாணவர்கள், மற்றும் பல்தரப்பட்ட கற்றல் சிரமங்களுடையவர்களிற்கிடையில் இத்தகைய முயற்சிகளின் வினைத்திறன் குறித்த கரிசனைகள் எழுப்பப்பட்டுள்ளன...




பொருளாதாரத்தின் தொழிலாளர் சந்தைத் தேவைகளை அடையாளம் காணவும் தேர்ச்சியை மேம்படுத்தல் மற்றும் மீள்தேர்ச்சிப்படுத்தல் மீது கவனம் செலுத்தவும் கல்வித் துறையானது முக்கிய அரச மற்றும் தனியார் துறைகளுடன் இணைந்து பணியாற்ற வேண்டிய அவசியமுள்ளது...

# முடக்கல் காலப்பகுதியில் குறைந்த வருமானம் பெறுகின்றவர்களினதும் பாதிப்படையக்கூடிய தனிநபர்களினதும் சமூகப்பொருளாதார வாழ்வினை உயர்த்துவதற்கு அரசாங்கம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டது...

**அரசாங்கம் பாதிக்கப்படக்கூடிய வீட்டலகொன்றிற்கு ரூ.5,000 கொடுப்பனவை இரு சுற்றுக்களில் வழங்கியது.**

**பிரதான நலன்புரி நிகழ்ச்சித் திட்டங்கள் - நன்மைபெறும் குடும்பங்களின் எண்ணிக்கையும் கொடைகளின் பெறுமதியும்**

| ஆண்டு | திவிநெகும / சமுர்த்தி மானிய நிகழ்ச்சித்திட்டம் | | சத்துணவு முற்கொடுப்பனவு நிகழ்ச்சித்திட்டம் | | உலர் உணவு நிகழ்ச்சித்திட்டம் |
|---|---|---|---|---|---|
| | குடும்பங்கள் (எண்ணிக்கை) (அ) | பெறுமதி (ரூ.மில்லியன்) (ஆ) | பயனாளர்கள் (எண்ணிக்கை) (அ) | பெறுமதி (ரூ.மில்லியன்) (இ) | பெறுமதி (ரூ.மில்லியன்) |
| 2016 | 1,407,235 | 40,740 | 337,554 | 5,746 | 111 |
| 2017 | 1,388,242 | 39,707 | 372,407 | 5,408 | 84 |
| 2018 | 1,384,021 | 39,239 | 329,047 | 5,490 | 58 |
| 2019 | 1,800,182 | 44,660 | 300,246 | 5,279 | 105 |
| 2020 | 1,770,086 | 52,472 | 238,034 | 4,761 | வி.கி. |

(அ) ஆண்டின் இறுதியில் உள்ளவாறு
(ஆ) மண்ணெண்ணெய் மானியம் உள்ளடங்கலாக
(இ) 2020ற்கான தரவுகள் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கலவிச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் அடிப்படையிலானது என்றபோதிலும் 2016 முதல் 2019ற்கான தரவுகள் நிதி அமைக்கின் அடிப்படையிலானது

*மூலங்கள்:* சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
மூலங்கள்: மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, அறநெறிப் பாடசாலைகள், கலவிச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சு
நிதி அமைச்சு

ஒட்டுமொத்த சனத்தொகைக்கும் சுத்தமான மற்றும் பாதுகாப்பான குடிநீர் வழங்கலை உறுதிசெய்ய அரசாங்கம் அதன் முயற்சிகளை தொடர்ந்தும் முன்னெடுத்தது

*2020இல்,*


பாதுகாப்பான குடிநீருக்கான அணுகுவழி
**93.2% (2019 - 91.9%)**

குழாய் நீருக்கான அணுகுவழி
**53.1% (2019 - 51.8%)**



**தலைக்குரிய வறுமை விகிதத்தின் செறிவு வரைப்படம் மாவட்ட தரவுகள் - 2016**

**கடந்த சில தசாப்தங்களில் வறுமை குறிப்பிடத்தக்களவில் வீழ்ச்சியடைந்த போதிலும் மாகாணங்கள் மற்றும் மாவட்டங்களுக்கிடையில் வறுமை மட்டத்தில் ஏற்றத்தாழ்வுகள் அவதானிக்கக் கூடியகதாகவுள்ளது.**




*மூலங்கள் :* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
இலங்கை மத்திய வங்கி


# கொவிட்-19இனால் தோற்றுவிக்கப்பட்ட சவால்களை தொலைத்தொடர்பூட்டல் துறை முனைப்புடன் இசைந்து சென்றது…

- கொவிட்-19 தொடர்பான பல கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் மெய்நிகரான தொடர்பினூடாக பொருளாதார நடவடிக்கைகளின் தொடர்ச்சிக்கு தொலைத்தொடர்பூட்டல் துறை வசதியளித்தது
- 'வீட்டிலிருந்து பணியாற்றுதலின்' அறிமுகம் மற்றும் நகர்வு மீதான கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதுடன் இணைய பயன்பாட்டில் கணிசமான வளர்ச்சி அவதானிக்கப்பட்டது

தொலைபேசி நுழைவு - 143.0
இணைய நுழைவு - 79.9




அகலப்பட்டை தரவுப் பயன்பாடு




*மூலங்கள்* : டயலொக் எக்சியாட்டா பி.எல்.சி.
இலங்கை டெலிகொம் பி.எல்.சி.
மொபிடெல் (தனியார்) லிமிடெட்
பார்ட்டி எயார்டெல் லங்கா (தனியார்) லிமிடெட்

குறிப்பு / பெடாபைட் = பில்லியன் ஜிகாபைட்


# ஆண்டின் இரண்டாவது காலாண்டுப் பகுதியில் தேசியளவிலான முடக்கல், வலுவிற்கான கேள்வியில் குறிப்பிடத்தக்க குறைவொன்றினைத் தோற்றுவித்த அதேவேளை அதன் பின்னர், அது உலகளாவிய நோய்த்தொற்றுக்கு முன்னர் காணப்பட்ட மட்டங்களுக்கு படிப்படியாகத் திரும்பியது…

- சராசரி மசகெண்ணெய் (பிரன்ட்) விலை, முன்னைய ஆண்டில் பதிவாகிய பீப்பாயொன்றுக்கு ஐ.அ.டொலர் 64.04 உடன் ஒப்பிடுகையில் 2020இல் பீப்பாயொன்று ஐ.அ.டொலர் 43.35 ஆக 32.3 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது. *2000ஆம் ஆண்டிலிருந்து ஆகக் குறைந்த பிரன்ட் மசகெண்ணெய் விலை 2020 ஏப்பிறல் நடுப்பகுதியில் பதிவாகியது.*

- உள்நாட்டு எரிபொருள் விலைகளைத் திருத்தம் செய்வதை விட பொருளாதாரம் முழுவதும் பன்னாட்டு விலைகளில் வழமைக்கு மாறான வீழ்ச்சியின் நன்மைகளின் சமமான பரம்பலினை உறுதிசெய்யும் நோக்குடன் எரிபொருள் விலை நிலைநிறுத்தல் நிதியம் 2020 மாச்சில் தாபிக்கப்பட்டது.


- ஆண்டுப்பகுதியில், உள்நாட்டு சந்தையில் பெற்றோலிய உற்பத்தியின் விற்பனை அளவு 16.8 சதவீதத்தினால் சுருக்கமடைந்தது.

### பன்னாட்டுச் சந்தையில் மசகெண்ணெயின் (பிறன்ட்) சராசரி விலை மற்றும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்தின் இறக்குமதி விலைகள்





*மூலங்கள் :* புளூம்போக்
இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம்

### முக்கிய வகைகளின் மின்சார விற்பனை செயல்திறன்




### மின்வலு உருவாக்கத்தின் கலவை




*மூலம் :* இலங்கை மின்சார சபை


- மொத்த மின்வலு உற்பத்தி, 2020இல் 15,714 கிலோவாட் மணித்தியாலங்களுக்கு (கி.வா.ம) 1.3 சதவீதத்தினால் வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது.

- தற்காலிக மதிப்பீடுகளின் படி, வீட்டுத் துறையிலிருந்தான கேள்வி வளர்ச்சியினை விட உயர்வாகயிருந்த கைத்தொழிலிலிருந்தான குறைவடைந்த கேள்வியின் காரணமாக மின்சார விற்பனைகள் 2020இல் 14,287 கி.வா.ம ஆக 2.2 சதவீதம் கொண்ட வீழ்ச்சியொன்றினைப் பதிவுசெய்தன.


# போக்குவரத்து நடவடிக்கைகள் மற்றும் துறைமுகத் தொழிற்பாடுகள் ஆண்டுப்பகுதியில் பின்னடைவைச் சந்தித்தன...

## வீதிப் போக்குவரத்து

பயணிகள் கி.மீ. (பில்) – இலங்கை போக்குவரத்துச் சபை





பயணிகள் கி.மீ. (பில்) – தனியார் துறை





## புகையிரதப் போக்குவரத்து

பயணிகள் கி.மீ. (மில்)





சரக்குத் தொன் கி.மீ. (மில்)





## வான்வழிப் போக்குவரத்து


பயணிகள் கி.மீ. (மில்)




சரக்கு (மெ.தொ. ’000)





## கொள்கலன் கையாளல், மாற்றிக் கப்பலேற்றல் அளவு மற்றும் கப்பல் வருகைகள்




மூலம் : இலங்கை துறைமுக அதிகாரசபை

## துறைமுக நடவடிக்கைகளின் செயலாற்றல்




மூலம் : இலங்கை துறைமுக அதிகாரசபை

| | | |
|---|---|---|
| சரக்குக் கையாளல் | 3.8% | 102.91 மில் மெ.தொ |
| கொள்கலன் கையாளல் | 5.2% | 6.86 மில் இ.ச.அ |
| மாற்றிக் கப்பலேற்றல்கள் | 3.2% | 5.77 மில் இ.ச.அ |

# கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றினால் குழப்பங்கள் ஏற்பட்ட போதிலும் 2020இல் பல பௌதீக உட்கட்டமைப்பு செயற்றிட்டங்கள் முன்னேற்றமடைந்தன...

**மாத்தறையிலிருந்து அம்பாந்தோட்டை வரையான தெற்கு விரைவுப் பாதை நீட்டிப்பு செயற்றிட்டம்** 2020இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.

- கொடகம, பலாத்துவ, பெலியத்த மற்றும் பரவகும்புக ஆகிய இடங்களை இணைக்கின்ற விரைவுப்பாதை இணைப்பு 2020 பெப்புரவரியில் பொதுமக்களுக்காக திறக்கப்பட்டது
- மத்தளையிலிருந்து அந்தரவெவ ஊடாக அம்பாந்தோட்டைக்கான விரைவுப்பாதை 2020இல் நிறைவுபெற்றது

- **மத்திய விரைவுப்பாதையின்** கட்டுமானப் பணி 2020இல் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட்டது.







- **கொழும்பு துறைமுக நகரச் செயற்றிட்டத்தின்** கீழ் அபிவிருத்திச் செயற்பாடுகள் 2020ஆம் ஆண்டில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.
  - வெளிவாரி பயன்பாட்டுப் பணி வழங்கல் நிர்மாணப் பணிகள் ஆண்டுகாலப்பகுதியில் தொடர்ந்தும் மேற்கொள்ளப்பட்டன.
  - நிதியியல் மற்றும் வர்த்தக மையத்தின் ஆரம்ப நிர்மாணப் பணிகள் ஐ.அ.டொலர் 1.1 பில்லியன் செலவில் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன.
  - இச் செயற்றிட்டம் தென்னாசிய பிராந்திய வலயத்தில் விசேட பொருளாதார வலயமொன்றாக தோற்றம்பெறுமென எதிர்ப்பார்க்கப்படுகின்றது.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் 2021 மாச்சு 24இல் வர்த்தமானியில் வெளியிடப்பட்டது



# 2020இல் முதன்மைப் பணவீக்கம் விரும்பத்தக்க வீச்சான 4 - 6 சதவீதத்திற்குள் தொடர்ந்தும் காணப்பட்ட அதேவேளையில் மையப் பணவீக்கம் ஆண்டு முழுவதும் குறைவாகக் காணப்பட்டது...


குறிப்பிட்ட சில முக்கிய உணவுப் பண்டங்களின் அதிகரித்த விலைகள் மற்றும் உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட வழங்கல் இடையூறுகளால் உணவுப் பணவீக்கத்தின் மேல் நோக்கிய அழுத்தங்களிற்கு மத்தியிலும் மந்தமான கேள்வி நிலைமைகள், நன்கு உறுதிநிலைப்படுத்தப்பட்ட பணவீக்க எதிர்பார்க்கைகள் மற்றும் நிருவகிக்கப்பட்ட விலைகளிற்கான கீழ் நோக்கிய திருத்தங்கள் என்பன பணவீக்கத்தை இலக்கிடப்பட்ட மட்டத்தில் பேண உதவிபுரிந்தன.

- கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணால் அளவிடப்படுகின்ற (ஆண்டிற்கு ஆண்டு) முதன்மைப் பணவீக்கமானது 2019 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 4.8 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியளவில் 4.2 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது

- தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட (ஆண்டிற்கு ஆண்டு) முதன்மைப் பணவீக்கமானது 2019 திசெம்பரில் பதிவுசெய்யப்பட்ட 6.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020 இறுதியில் 4.6 சதவீதத்திற்கு குறைவடைந்தது

- மையப் பணவீக்கமானது கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண் மற்றும் தேசிய நுகர்வோர் விலைச் சுட்டெண்களின் அடிப்படையின்படி 2020 முழுவதும் தொடர்ந்தும் மட்டுப்படுத்தப்பட்டதாகவே காணப்பட்டது

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அடிப்படையில் முதன்மை, உணவு மற்றும் உணவல்லாப் பணவீக்கம் (2013=100, ஆண்டிற்கு ஆண்டு)







# வெளிநாட்டுத்துறை அபிவிருத்திகளும் கொள்கைகளும்

*அரசாங்கமும் மத்திய வங்கியும் காலந்தவறாது முன்னெடுத்த கொள்கை வழிமுறைகளின் ஆதரவுடன் வெளிநாட்டுத்துறை 2020 இல் கடும் சிக்கல்களை எதிர்த்துநின்றது...*


# ஏற்றுமதி வருவாய்கள் நோய்த்தொற்றுக்கு முன்னைய மட்டங்களிற்கு ஒப்பீட்டு ரீதியில் குறுகியதொரு காலத்தினுள் மீளெழுந்தன...

- ஏற்றுமதிகளிலிருந்தான வருவாய்கள் 15.9 சதவீதத்தினால் ஐ.அ.டொலர் 10,047 மில்லியனுக்கு வீழ்ச்சியடைந்தன:
- **வீழ்ச்சிகள் பதிவுசெய்யப்பட்டவை:**
  - ஆடைகள் (-24.3%)
  - பெற்றோலிய உற்பத்திப் பொருட்கள் (-28.3%)
- **தனியாள் பாதுகாப்புச் சாதனங்கள் மற்றும் சில வேளாண்மை ஏற்றுமதிகளினால் ஏற்றுமதிகளின் அதிகரிப்புத் தூண்டப்பட்டது:**
  - பிளாத்திக்கு மற்றும் பொருட்கள் (140.0%)
  - தயாரிக்கப்பட்ட புடவைப்பொருட்கள் (110.3%)
- ஐக்கிய அமெரிக்கா இலங்கை ஏற்றுமதிகளின் (25%) பிரதான வாங்குநராகத் தொடர்ந்தும் விளங்கியதுடன் அதனைத் தொடர்ந்து ஐக்கிய இராச்சியமும் (9%) இந்தியாவும் (6%) காணப்பட்டன.


## ஏற்றுமதிகளின் உள்ளடக்கம் - 2020




## நாடுகளின்படி ஏற்றுமதிகள்




### கைத்தொழில்




### வேளாண்மை கனிப்பொருள் மற்றும் ஏனையவை



# குறிப்பிடத்தக்க குறைந்த உலகளாவிய எண்ணெய் விலைகளுடன் அத்தியவசியமல்லாத இறக்குமதிகளைக் கட்டுப்படுத்துவதற்கான வழிமுறைகள் 2020 இல் இறக்குமதிச் செலவினத்தைக் குறைக்க உதவின.



## நுகர்வு

**-14.0%**
(ஆண்டுக்காண்டு)

ஐ.அ.டொ 3.4 பில்.



ஐ.அ.டொ. 4.0 பில்.



## இடைநிலை

**-20.2%**
(ஆண்டுக்காண்டு)

ஐ.அ.டொ 9.1 பில்.



ஐ.அ.டொ. 11.4 பில்.



## முதலீடு மற்றும் ஏனையவை

**-22.4%**
(ஆண்டுக்காண்டு)

ஐ.அ.டொ 3.6 பில்.




ஐ.அ.டொ. 4.6 பில்.


2019 2020

- இறக்குமதிச் செலவினம் ஐ.அ.டொ 16,055 மில்லியனுக்கு 19.5 சதவீதத்தினால் வீழ்ச்சியடைந்தது.
- **குறைந்தளவான இறக்குமதிகளுக்கு வழிவகுத்தவை:**
  - எரிபொருள் (-34.7%)
  - புடவைகள் மற்றும் புடவைப் பொருட்கள் (-19.7%)
  - தனியாள் ஊர்திகள் (-65.3%)
- **அதிகரிப்புக்கள் பதிவு செய்யப்பட்டவை:**
  - எண்ணெய் மற்றும் கொழுப்பு (தேங்காயெண்ணெய் காரணமாக) (263.7%)
  - சீனி மற்றும் இனிப்புப் பண்டங்கள் (37.7%)
  - மருத்துவ மற்றும் மருந்தாக்கல் பொருட்கள் (7.8%)
- சீனா (22%) மற்றும் இந்தியா (19%) இலங்கையின் இறக்குமதியின் முக்கிய மூலங்களாகத் தொடர்ந்தும் முனைப்புப் பெற்றிருப்பதுடன் அதனைத் தொடர்ந்து ஐக்கிய அரபு எமிரேட்சு (6%) காணப்பட்டது.

## இறக்குமதிகளின் உள்ளடக்கம் - 2020




## நாடுகளின்படி இறக்குமதிகள்- 2020




# இதன்படி, வர்த்தகப் பற்றாக்குறையில் குறிப்பிடத்தக்கதொரு முன்னேற்றம் பதிவு செய்யப்பட்டது...


**வர்த்தகப் பற்றாக்குறை கடந்த ஆண்டுடன் ஒப்பிடும் போது ஐ.அ.டொ 1,989 மில்லியனால் ஐ.அ.டொ 6008 இற்கு வீழ்ச்சியடைந்தது.**

ஏற்றுமதிகள், இறக்குமதிகள் மற்றும் வர்த்தக நிலுவை
(ஐ.அ.டொ. பில்லியன்)





வர்த்தக மாற்று விகிதம் மற்றும் வர்த்தகச் சுட்டெண்கள்



# வெளிநாட்டு நடைமுறைக் கணக்கு மேம்படுத்தப்பட்ட வேளையில், நிதியியல் கணக்குக்கான உட்பாய்ச்சல்கள் மிதமானவையாகக் காணப்பட்டன...





தொழிலாளர் பணவனுப்பல்கள் தொடர்பான விளக்கமானதொரு பகுப்பாய்வு சிறப்புக்குறிப்பில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது...

சீன அபிவிருத்தி வங்கியிடமிருந்து ஐ.அ.டொலர் 500 மில்லியன் கொண்ட வெளிநாட்டு நாணய கால நிதியிடல் வசதி, இந்திய ரிசோவ் வங்கியின் ஐ.அ.டொலர் 400 மில்லியன் கொண்ட சார்க் பினான்ஸ் நிதியின் பரஸ்பர பரிமாற்றல் வசதி மற்றும் ஐ.அ.டொலர் 670 மில்லியன் கொண்ட (கடன்கள் உட்பட) வெளிநாட்டு நேரடி முதலீடுகளுடன் தொடர்பான உட்பாய்ச்சல்கள் நிதியியல் கணக்குக்கான முக்கிய உட்பாய்ச்சல்கள் உள்ளடக்கியிருந்தன.

ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் வெளிப்பாய்ச்சல்களையும் 2020 ஒத்தோபரில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட் நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் தீர்ப்பனவினையும் முக்கிய வெளிப்பாய்ச்சல்கள் உள்ளடக்கியிருந்தன.


# வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளுக்கும் மட்டுப்படுத்தப்பட்ட வெளிநாட்டுப் பரிவர்த்தனை உட்பாய்ச்சல்களுக்கும் மத்தியில் மொத்த அலுவல்சார் ஒதுக்குகள் வீழ்ச்சியடைந்தன...

## சென்மதி நிலுவை




தேறிய பன்னாட்டு ஒதுக்குகளிலான மாற்றத்திற்குச் சமமானதாக விளங்கும் திரண்ட நிலுவை 2019இல் பதிவுசெய்யப்பட்ட மிகையினைத் தொடர்ந்து 2020இல் பற்றாக்குறையொன்றினைப் பதிவுசெய்தது.

## மொத்த அலுவல்சார் ஒதுக்குகளும் மொத்த வெளிநாட்டுச் சொத்துக்களும்




*மூலம் : இலங்கை மத்திய வங்கி*


## மொத்த அலுவல்சார் ஒதுக்குகள்

**2020 : ஐ.அ.டொ 5.7 பில்லியன்**
**(4.2 மாத இறக்குமதிகள்)**

2019 : ஐ.அ.டொ 7.6 பில்லியன்
(4.6 மாத இறக்குமதிகள்)

# 2020இல் இலங்கையின் ஒட்டுமொத்த வெளிநின்ற வெளிநாட்டுப் படுகடன் வீழ்ச்சியடைந்தது.

### வெளிநாட்டுப் படுகடன்



மூலம் : இலங்கை மத்திய வங்கி

## மொத்த வெளிநாட்டுப் படுகடன் இருப்பு

**2020 இறுதியில் : ஐ.அ.டொ 49.2 பில்லியன் (மொ.உ.உற்பத்தியின் 60.9%)**

2019 இறுதியில் : ஐ.அ.டொ 54.8 பில்லியன் (மொ.உ.உற்பத்தியின் 65.3%)

## வெளிநாட்டுப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்

**2020 : ஐ.அ.டொ 4.4 பில்லியன்**

2019 : ஐ.அ.டொ 5.8 பில்லியன்

## 2020 இல் வெளிநாட்டுப் படுகடன் இருப்பு வீழ்ச்சியடைந்தமைக்கு முக்கிய காரணிகள்:


- 2020 ஒத்தோபரில் முதிர்ச்சியடைந்த ஐ.அ.டொலர் 1 பில்லியன் கொண்ட நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் மீள்கொடுப்பனவு
- அரசாங்கத்தினால் பெற்றுக்கொள்ளப்பட்ட வெளிநின்ற வெளிநாட்டுக் கடன்களின் குறைப்பு
- ரூபாவில் குறித்துரைக்கப்பட்ட அரச பிணையங்களில் வதிவற்றோர் உடமைகளில் ஏற்பட்ட வீழ்ச்சி
- இலங்கையின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் வதிவோரின் உடமையில் அதிகரிப்பு
- இலங்கையின் வெளிநின்ற நாட்டிற்கான பன்னாட்டு முறிகளின் சந்தை விலைகளில் ஏற்பட்ட குறிப்பிடத்தக்க வீழ்ச்சி

**வெளிநாட்டு நிதியிடல் திரட்டலில் உள்ள சவால்களுக்கு மத்தியில் இலங்கை படுகடன் தீர்ப்பனவுகளில் அப்பழுக்கற்ற பதிவுகளைப் தொடர்ந்தும் பேணிக் கொண்டது...**

# ரூபாவின் தேய்மானம் ஐ.அ.டொலருக்கெதிராக 2020 இல் 2.6 சதவீதத்திற்கு மட்டுப்படுத்தப்பட்டது…

- 2020 மாச்சு - ஏப்பிறல் காலப்பகுதியிலும் 2020இன் பிற்பகுதியிலும் அழுத்தங்களுக்குட்பட்ட போதும் காலந்தவறாத வழிமுறைகளுடன் செலாவணி வீதத்தில் குறிப்பிடத்தக்க தளம்பல்கள் தடுக்கப்பட்டன.
- ஒட்டுமொத்தமாக தேறிய அடிப்படையில் (ஐ.அ.டொ 283 மில்லியன்), மத்திய வங்கி, 2020இல் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையிலிருந்து வெளிநாட்டுச் செலாவணியினை ஈர்த்துக் கொண்டது.
- உண்மைத் தாக்கமுள்ள செலாவணி வீதச் சுட்டெண்கள் தள ஆண்டின் மட்டத்திற்கு (2017=100) மிகக் கீழே தொடர்ந்தும் காணப்பட்டு, வெளிநாட்டுப் போட்டித்தன்மைகளை எடுத்துக்காட்டின.

### செலாவணி வீதமும் உள்நாட்டு வெளிநாட்டுச் செலாவணிச் சந்தையில் மத்திய வங்கியின் தலையீடும்



*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

### செலாவணி வீத அசைவுகள்



*மூலம் : இலங்கை மத்திய வங்கி*





# இறைக்கொள்கையும் அரச நிதியும்

இறைக்கொள்கையானது ஆண்டின் ஆரம்பத்தில் பாதிக்கப்பட்ட பொருளாதாரத்திற்கு ஆதரவளிப்பதனை நோக்கி திசைதிருப்பப்பட்டது. எனினும், உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் இறைத்தொழிற்பாடுகள் 2020 காலப்பகுதியில் கணிசமான சவால்களுக்கு முகங்கொடுத்திருந்ததுடன் ஒட்டுமொத்த இறைப் பெறுபேறுகள் ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்பட்டதனைக் காட்டிலும் பலவீனமடைந்திருந்தன...


# பல்வேறு சவால்களுக்கு மத்தியில், பொருளாதார நடவடிக்கைகளின் விரைவான மீட்சி மற்றும் உயர்ந்தளவான வளர்ச்சிப்பாதையை நோக்கிய பொருளாதாரத்தின் திரும்பல் என்பவற்றை நிச்சயப்படுத்திக்கொள்வதற்கு உலகளாவிய நோய்த்தொற்றினால் பாதிக்கப்பட்ட வியாபாரங்கள் மற்றும் தனிநபர்களுக்கு அரசாங்கம் தொடர்ந்தும் ஆதரவளித்திருந்தது...

- உலகளாவிய நோய்த்தொற்றிற்கு மத்தியில் 2020 காலப்பகுயின் கணிசமான சவால்கள் எதிர்பார்க்கப்பட்டதைக் காட்டிலும் குறைந்தளவான அரசிறை சேகரிப்புக்கள் மற்றும் உயர்ந்தளவான மீண்டெழும் செலவினம் என்பவற்றிற்கு இட்டுச்சென்றிருந்தது.

**இறைத்துறை செயலாற்றத்தின் சுருக்கம் (மொ.உ.உ.இன் % ஆக)**





- இறைத்தொழிற்பாடுகள் மீதான அதிகரித்த அழுத்தங்களை பிரதிபலித்து முக்கிய இறை மீதிகள் 2020இல் மோசமடைந்திருந்ததுடன் அதன் விளைவாக 2020இன் இறுதியில் வெளிநின்ற மத்திய அரச படுகடன் அதிகரித்திருந்தது.



# மொ.உ.உ.இன் சதவீதமாக அரசிறை 2019இன் 12.6 சதவீதத்திலிருந்து 2020இல் 9.1 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்ததுடன் இது வரி அரசிறை சேகரிப்பின் கூர்மையான வீழ்ச்சியை பிரதிபலித்திருந்தது…

- இப்பெறுபேறானது பொருளாதார நடவடிக்கைகளின் சுருக்கம் காரணமாக ஏற்பட்ட பலவீனமான அரசிறைப் பாய்ச்சல் அதேபோன்று 2019இன் பிற்பகுதியிலிருந்து வரித்திருத்தங்கள் ஊடாக அமுலாக்கப்பட்ட இறைத்தூண்டல் வழிமுறைகள் என்பவற்றின் விளைவாகும்.

## அரசிறையின் உள்ளமைப்பு - 2020




*மூலம்:* நிதி அமைச்சு

## அரசிறையின் சுருக்கம்

| விடயம் | 2019 (அ) | 2020 (ஆ) |
|---|---|---|
| ரூபா. மில்லியன் | | |
| வரி அரசிறை | 1,734,925 | 1,216,542 |
| வருமான வரிகள் | 427,700 | 268,249 |
| பெறுமதி சேர் வரிகள் | 443,877 | 233,786 |
| கலால் வரிகள் | 399,478 | 321,932 |
| இறக்குமதி தீர்வைகள் | 98,427 | 114,183 |
| ஏனைய வரிகள் | 365,443 | 278,392 |
| வரியல்லா அரசிறை | 155,974 | 151,417 |
| மொத்த அரசிறை | 1,890,899 | 1,367,960 |
| மொ.உ.உ இன் சதவீதமாக (இ) | | |
| வரி அரசிறை | 11.6 | 8.1 |
| வருமான வரிகள் | 2.8 | 1.8 |
| பெறுமதி சேர் வரிகள் | 3.0 | 1.6 |
| கலால் வரிகள் | 2.7 | 2.2 |
| இறக்குமதி தீர்வைகள் | 0.7 | 0.8 |
| ஏனைய வரிகள் | 2.4 | 1.9 |
| வரியல்லா அரசிறை | 1.0 | 1.0 |
| மொத்த அரசிறை | 12.6 | 9.1 |

(அ) நிதியமைச்சின்படி, 2019இற்கான இறைத்துறை புள்ளிவிபரங்கள் 2020 இற்காக அறிவிக்கப்பட்ட வரவுசெலவுத்திட்ட உரையில் அறிவிக்கப்பட்டவாறு மீள்குறிப்பிடப்பட்டுள்ளது.

(அ) தற்காலிகமானது


(இ) 2019இற்கான தரவிற்கு 2021 மார்ச் 16ஆம் நாளன்று தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தால் வெளியிடப்பட்ட திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

*மூலம்:* நிதி அமைச்சு

# மூலதன செலவினத்தின் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியின் காரணமாக மொத்த செலவினம் மற்றும் தேறிய கடன்வழங்கலானது வீழ்ச்சியடைந்திருந்தது...

- செலவினப் பக்கத்தில், நிதி அமைச்சானது நிலுவைக் கொடுப்பனவுகள் மீது ஏற்பட்ட செலவினமான ரூ. 422.6 பில்லியன் தொகையினை 2020இலிருந்து 2019இற்கு நகர்த்துவதன் ஊடாக இறைப் புள்ளிவிபரங்களுக்கு சீராக்கமொன்றை மேற்கொண்டிருந்தது.
- அதற்கிணங்க, மொத்த செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கலானது மொ.உ.உ.இல் 2019இன் 22.2 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020இல் 20.3 சதவீதத்தினை பதிவுசெய்திருந்தது
  - மீண்டெழும் செலவினம் சம்பளம் மற்றும் கூலிகள், மானியங்கள் மற்றும் மாற்றல்கள், மற்றும் வட்டிக் கொடுப்பனவுகள் என்பவற்றின் செலவுகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் முக்கிய காரணமாக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 2019இன் 16.1 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2020இல் 17.0 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.
  - மூலதன செலவினம் மொ.உ.உ. இல் 2019இன் 6.1 சதவீதத்திலிருந்து 2020இல் 3.3 சதவீதத்திற்கு குறிப்பிடத்தக்களவில் சுருக்கமடைந்திருந்தது.

அரச மீண்டெழும் செலவினத்தின் உள்ளமைப்பு – 2020 (அ)





(அ) சார்புப் பங்கானது 2020இலிருந்து 2019இற்கு நகர்த்தப்பட்ட மீண்டெழும் செலவினத்தின் நிலுவைக் கொடுப்பனவுகளுக்கான சீராக்கங்கள் நீங்கலாக கணிப்பிடப்பட்டுள்ளது.

*மூலம்:* நிதி அமைச்சு

# உலகளாவிய நோய்த்தொற்றின் தாக்கமானது 2020இல் முக்கிய இறை மீதிகள் குறிப்பிடத்தக்களவில் மோசமடைவதனை விளைவித்திருந்தது...

முக்கிய இறைக் குறிகாட்டிகள்
(மொ.உ.உ.இன் %)





(அ) நிதி அமைச்சிற்கமைய 2019இற்கான இறைத்துறைப் புள்ளிவிபரங்கள் 2020இற்கான வரவுசெலவுத்திட்டத்தில் அறிவிக்கப்பட்டவாறு மீள்குறிப்பிடப்பட்டுள்ளது.

மூலம்: நிதி அமைச்சு

- நிலுவைகளுக்கான சீராக்கங்களின் பின்னர், ஒட்டுமொத்த வரவு செலவுத்திட்டப் பற்றாக்குறையானது மொ.உ.உ.இன் சதவீதமாக 2019இன் 9.6 சதவீதத்திலிருந்து 2020இல் 11.1 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.
- நடைமுறைக் கணக்கு பற்றாக்குறை மொ.உ.உ.இன் சதவீதமாக 2019இன் 3.6% சதவீதத்திலிருந்து 2020இல் 7.9 சதவீதத்திற்கு அதிகரித்திருந்தது.
- ஆரம்ப மீதியானது மொ.உ.உ.இன் சதவீதமாக 2019இன் 3.6 சதவீதப் பற்றாக்குறையுடன் ஒப்பிடுகையில் 2020இல் 4.6 சதவீதப் பற்றாக்குறையொன்றைப் பதிவுசெய்திருந்தது.


முக்கிய இறை மீதிகள் (மொ.உ.உ.இன் %)




# வரவு செலவுத் திட்ட பற்றாக்குறைக்கான நிதியீட்டமானது 2020இல் உள்நாட்டு மூலங்களிலிருந்து பூர்த்தி செய்யப்பட்டது...

- மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக வெளிநின்ற மத்திய அரச படுகடன் 2019 இறுதியின் 86.8 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 101.0 சதவீதத்திற்கு அதிகரித்திருந்ததுடன் இது வெளிநின்ற படுகடன் இருப்புக்களின் அதிகரிப்பு அதேபோன்று ஆண்டுகாலப்பகுதியில் சுருக்கமடைந்த மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பவற்றின் இணைந்த தாக்கத்தை பிரதிபலித்திருந்தது.

வெளிநின்ற மத்திய அரச படுகடன்




- மொத்த படுகடனில் வெளிநாட்டு படுகடனின் சார்பளவு பங்கானது 2019 இறுதியின் 47.6 சதவீதத்திலிருந்து 2020 இறுதியில் 40.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்திருந்தது.
- இது சாதகமற்ற உலகச் சந்தை நிலைமைகளுக்கு மத்தியில் வெளிநாட்டு நிதியிடல் அனுகலின் வரையறை அதேபோன்று வெளிநாட்டு நிதியீட்டத்தைக் காட்டிலும் உள்நாட்டு நிதியீட்டத்தின் மீதான அரசாங்கத்தின் வெளிப்படுத்தப்பட்ட விருப்பத்தேர்வு என்பவற்றைப் பிரதிபலித்திருந்தது.




**பாதகமான ஊகத்திற்கு மத்தியில் அரசாங்கம் அதன் அப்பழுக்கற்ற படுகடன் பணிக்கொடுப்பனவுக்கான பதிவுகளை தொடர்ந்திருந்தது...**





# நாணயக் கொள்கை, வட்டி வீதங்கள், பணம் மற்றும் கொடுகடன்

*நிதிகள் மீதான செலவினத்தை குறைத்தல், பணச் சந்தையில் போதியளவு திரவத்தன்மையை உறுதிப்படுத்தல் மற்றும் நோய்த்தொற்றினால் ஏற்பட்ட சவாலான சூழ்நிலையில் நிதியியல் முறைமையின் சுமூகமான தொழிற்பாட்டினை வசதிபடுத்துவது மீது கவனஞ்செலுத்தி மத்திய வங்கியானது மிகவும் ஓர் தளர்த்தப்பட்ட நாணயக்கொள்கை நிலைப்பாட்டினை 2020இல் நடைமுறைப்படுத்தியது...*

# கட்டுப்படுத்தப்பட்ட பணவீக்க நிலைப்பாடுகளைக் கருத்தில் கொண்டு கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவுகளிலிருந்து பொருளாதாரத்தின் மீட்சியை ஆதரிக்கும் நோக்கில், 2020 காலப்பகுதியில் மத்திய வங்கி தளர்த்தப்பட்ட நாணயக் கொள்கை நிலைப்பாட்டினைத் தொடர்ந்தது...

**துணைநில் வீதவீச்சு, சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பணவீதம், நியதி ஒதுக்கு விகிதம் மற்றும் வங்கி வீதம**




*மூலம்:* இலங்கை மத்திய வங்கி

- கொள்கை வட்டி வீதங்கள் மொத்தமாக 250 அடிப்படைப் புள்ளிகளால் குறைக்கப்பட்டதுடன் நியதி ஒதுக்கு விகிதம் மொத்தமாக 3 சதவீதப் புள்ளிகளால் குறைக்கப்பட்டது.
- வங்கி வீதமானது துணைநில் கடன்வழங்கல் வசதி வீதத்துடன் இசைந்து செல்லும் விதத்தில் தன்னியக்கமாக சரிசெய்துகொள்ள அனுமதிக்கப்பட்டு 2020இல் +300 அடிப்படை புள்ளிகள் எல்லையுடன் 650 அடிப்படைப் புள்ளி வீழ்ச்சியினை விளைவித்தது.
- சௌபாக்யா கொவிட்-19 புத்துயிரளித்தல் கடன் வசதியின் கீழ் சலுகைக் கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தியது.

- மிதமிஞ்சிய வட்டி வீதங்களைக் குறைப்பதற்கு மத்திய வங்கி 2020 ஓகத்தில் மேலும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளை நடைமுறைப்படுத்தியது.
- ஈடு பிணையளிக்கப்பட்ட வீடமைப்பு கடன்கள் மீது ஆண்டுக்கு 7 சதவீதம் கொண்ட உயர்ந்தபட்ச வட்டி வீதத்தினை அறிமுகப்படுத்தியது.
- நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவிலான தொழில்முயற்சிகள் துறை மீது முன்னுரிமைத் துறைக் கடன்வழங்கல் இலக்குகளை வங்கிகளுக்கு அறிமுகஞ்செய்ய தீர்மானித்தது.


- உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் அரசாங்க காசுப்பாய்ச்சல் சிக்கல்களை பரிசீலனையில்கொண்டு மத்திய வங்கி அரசாங்கத்திற்கு நிதியியல் ஆதரவினை வழங்கியது.

**2020ஆம் ஆண்டில் இலங்கை மத்திய வங்கியால் பின்பற்றப்பட்ட நாணயக் கொள்கைக் கருவிகள் ஓர் சிறப்புக்குறிப்பில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளன...**

# இந்த கொள்கை, தொழிற்பாடு மற்றும் ஒழுங்குமுறைப்படுத்தல் வழிமுறைகளின் தாக்கத்தினை பிரதிபலித்து, ஒட்டுமொத்த சந்தை கடன்வழங்கல் வீதங்கள் வரலாற்றிலேயே குறைவான மட்டங்களுக்கு வீழ்ச்சியடைந்தன...



## தேர்ந்தெடுக்கப்பட்ட சந்தை வட்டி வீதங்களின் அசைவுகள்





*மூலம் : இலங்கை மத்திய வங்கி*

## வட்டி வீதங்களின் சீராக்கங்கள்

| வட்டி வீதம் | 2020 இறுதியில் | 2019 இறுதியிலிருந்து 2020 இறுதி வரை |
|---|---|---|
| | % | *அடிப்படைப் புள்ளிகளில் மாற்றம்* |
| மாதாந்த சராசரி நிறையேற்றப்பட்ட முதன்மை கடன் வழங்கல் வீதம் | 5.74 | -426 |
| சராசரி நிறையேற்றப்பட்ட கடன் வழங்கல் வீதம் | 10.29 | -330 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய கடன் வழங்கல் வீதம் | 8.38 | -442 |
| சராசரி நிறையேற்றப்பட்ட அழைப்பு பண வீதம் | 4.55 | -290 |
| 91-நாள் திறைசேரி உண்டியல் | 4.69 | -282 |
| 182-நாள் திறைசேரி உண்டியல் | 4.80 | -322 |
| 364-நாள் திறைசேரி உண்டியல் | 5.05 | -340 |
| சராசரி நிறையேற்றப்பட்ட வைப்பு வீதம் | 5.80 | -240 |
| சராசரி நிறையேற்றப்பட்ட நிலையான வைப்பு வீதம் | 7.14 | -291 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய வைப்பு வீதம் | 4.93 | -396 |
| சராசரி நிறையேற்றப்பட்ட புதிய நிலையான வைப்பு வீதம் | 5.08 | -409 |

# 2020இன் பின்னரான காலப்பகுதியில் தனியார் துறைக்கான கொடுகடனில் படிப்படியான மீட்சியொன்று அவதானிக்கப்பட்டது...

**வர்த்தக வங்கிகளால் தனியார் துறைக்கான கொடுகடன்**





*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

- **தனியார் துறைக்கு வழங்கப்பட்ட கொடுகடன் ரூ. 374.1 பில்லியனால் அதிகரித்து, 2020 இறுதியளவில் ஆண்டிற்கு ஆண்டு 6.5 சதவீதம் கொண்ட வளர்ச்சியொன்றினைப் பதிவுசெய்தது**

**முக்கிய துறைகளுக்கான தனியார் துறையின் கொடுகடனின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி (¾)**

தனியார் துறைக்கான கொடுகடன் 2020இன் இரண்டாமரையாண்டில் விரிவடைந்தமை பிரதானமாக தனிப்பட்ட கடன்கள் மற்றும் முற்பணங்கள் மூலம் தூண்டப்பட்டிருந்தது





*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**ஓர் புதிய அளவீட்டினால் மத்திய வங்கியினால் அளவிடப்படும் நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவுத் தொழில்முயற்சிகளுக்கான வட்டி வீதங்கள் மற்றும் கொடுகடனின் நடத்தை ஓர் சிறப்புக் குறிப்பில் ஆராயப்படுகிறது...**

# வங்கித்தொழில் முறைமையிலிருந்து அரசிற்கான தேறிய கொடுகடன் 2020இல் கணிசமான அளவினால் அதிகரித்தது....

**உள்நாட்டு கொடுகடனின் ஆண்டிற்கான அதிகரிப்பு**




தனியார் துறைக்கான கொடுகடன் | அரசிற்கான தேறிய கொடுகடன் | அரச கூட்டுத்தாபனங்களுக்கான கொடுகடன்


*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**நோய்த்தொற்றின் மத்தியில் ஓர் இடரில்லாத முறையில் இறைத் தொழிற்பாடுகளை அரசு மேற்கொள்வதற்குத் அவசியமான நிதியிடலை மத்திய வங்கியும் வங்கித்தொழில் முறைமையும் வழங்கியது**

**அரச துறைக்கான பணம் மற்றும் கொடுகடனின் விரிவாக்கம் (ஆண்டிற்கான மாற்றம், ரூ.பில்)**


| | அரசிற்கான தேறிய கொடுகடன் | அரசிற்குச் சொந்தமான தொழில் முயற்சிகளுக்கான கொடுகடன் |
|---|---|---|
| 2019 | 279 | 63 |
| 2020 | 1,752 | 184 |






# வங்கித்தொழில் முறைமையின் தேறிய வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சிக்கு மத்தியில் உள்நாட்டு கொடுகடனின் வளர்ச்சி விரிந்த பண நிரம்பலில் ஓர் விரைவான விரிவாக்கத்தை விளைவித்தது...

**விரிந்த பணத்தின் ஆண்டுக்காண்டு மாற்றத்திற்கான பங்களிப்பு - $M_{2b}$ (சொத்துப்பக்கம்)**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**நாணயக் கூட்டுக்களின் ஆண்டுக்காண்டு வளர்ச்சி**




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி


1950-2020 Stability Sustainability Shared Prosperity




# நிதியியல்துறை செயலாற்றம் மற்றும் முறைமை உறுதித்தன்மை


நிதியியல் நிறுவனங்கள் மற்றும் வைப்பாளர்களின் நலவுரித்துக்களை பாதுகாக்கும் நோக்குடன் பல வழிமுறைகளை அறிமுகஞ்செய்த அதே வேளையில் நோய்தொற்றினால் பொருளாதாரத்தினால் தேவைபடுத்தப்பட்ட எப்போதுமில்லாத ஆதரவினை நிதியியல் துறை வழங்குவதற்கு இயலச்செய்து மத்திய வங்கி நிதியியல் முறைமையின் உறுதித்தன்மையை உறுதிசெய்தது...

# வங்கித்தொழில் துறை 2020இல் மிதமான வளர்ச்சியினை காண்பித்தது...

- **நோய்த்தொற்றின் விளைவுகளினால் ஏற்பட்ட சவால்மிக்க பொருளாதாரச் சூழலிருந்து தோற்றம்பெற்ற இடர்நேர்வுகளுக்கு மத்தியிலும் வங்கித்தொழில் துறை மிதமான வளர்ச்சியினை காண்பித்தது.**

- **நோய்த்தொற்றினால் ஏற்பட்ட கொடுகடனின் தரம் மோசமடைந்தமை மற்றும் வெளிநாட்டுச் செலாவணியின் உட்பாய்ச்சல்களின் மிதமடைதல் என்பன வங்கித்தொழில் துறைத் தொழிற்பாடுகளின் பாரிய பேரண்ட முன்மதியுடைய கரிசனைகளாகக் காணப்பட்டன.**

வங்கித்தொழில் துறையின் இலாபத்தன்மை விகிதங்கள்




*மூலம்* : இலங்கை மத்திய வங்கி

**கடன்கள் மற்றும் முற்பணங்கள், முதலீடுகள் மற்றும் வைப்புக்கள் என்பன தொடர்பில் வங்கித்துறையானது திருப்திகரமானதொரு வளர்ச்சியினை வெளிப்படுத்துகிறது.**

| | | |
|---|---|---|
| ↑ 11.9 | ↑ 40.0 | ↑ 21.6 |
| கடன்கள் மற்றும் முற்பணங்களின் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி (%) | முதலீடுகளின் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி (%) | வைப்புக்களின் ஆண்டுக்கு ஆண்டு வளர்ச்சி (%) |
| ↑ 4.9 | ↑ 37.3 | ↓ 16.5 |
| திரண்ட செயற்படாக் கடன்களின் விகிதம் (%) | நியதி திரவச் சொத்து விகிதம் உள்நாட்டு வங்கித் தொழில் பிரிவு (%) | மூலதனப் போதுமாந்தன்மை விகிதம் (%) |

**கொவிட் - 19 நோய்த் தொற்றிலிருந்து தோன்றிய நீடித்த சவால்களுக்கு மத்தியிலும் வங்கித் துறையானது நெகிழக்கூடிய தன்மையில் 2020 காலப்பகுதியில் தொடர்ந்தும் காணப்பட்டது**




1950-2020 Stability Sustainability Shared Prosperity 70

# உரிமம்பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக் கம்பனிகளின் செயலாற்றம் 2020இல் மோசமடைந்தது...


- கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுடன் தொடர்புபட்ட தடங்கல்கள் மற்றும் பொதுமக்களின் நம்பிக்கை குறைவடைந்தமை என்பனவற்றின் முக்கிய காரணமாக, இவ்வாண்டுப்பகுதியில் சொத்துத் தளம், கொடுகடன் மற்றும் வைப்புகள் மற்றும் இலாபத்தன்மையில் ஏற்பட்ட வீழ்ச்சி அதேபோன்று செயற்படாக் கடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பனவற்றினால் பிரதிபலிக்கப்பட்டவாறு உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக்குவிடும் கம்பனிகள் துறை மந்தமான செயலாற்றமொன்றினைப் பதிவுசெய்தது.

உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகைக் கம்பனிகள் துறையின் இலாபக் குறிகாட்டிகள்




மூலம் : இலங்கை மத்திய வங்கி

உரிமம் பெற்ற நிதிக்கம்பனிகள் மற்றும் சிறப்பியல்பு வாய்ந்த குத்தகை கம்பனிகள் துறையின் செயற்படாகடன்கள் மற்றும் ஏற்பாட்டுக்காப்பு





மூலம்: இலங்கை மத்திய வங்கி

- வங்கித்தொழில் துறை மற்றும் உரிமம்பெற்ற நிதிக் கம்பனிகள் மற்றும் சிறப்பியல்புவாய்ந்த குத்தகைக்கம்பனிகள் துறை மீது மேலே குறிப்பிடப்பட்டுள்ள விளைவுகளின் எதிர்கணியமான தாக்கத்தினை முகாமைத்துவஞ்செய்யும் அதேவேளையில் கொவிட்-19 நோய்தொற்றினால் பாதிக்கப்பட்ட வர்த்தகங்கள் மற்றும் தனிநபர்களுக்கு உதவி வழங்குவதற்கு நிதியியல் முறைமையை இயலச்செய்யும் நோக்குடன் மத்திய வங்கி பல ஒழுங்குமுறை தணிப்புக்களை வழங்கியது.

# நோய்த்தொற்றின் தொடக்கத்தில் பதிவுசெய்யப்பட்ட கணிசமான வீழ்ச்சியிலிருந்து கொழும்புப் பங்குப் பரிவர்த்தனை மீட்சிபெற்று 2020 யூலை நடுப்பகுதியிலிருந்து ஓர் குறிப்பிடத்தக்க மேம்பாட்டினைப் பதிவுசெய்தது...


- 2020இல் கொழும்புப் பங்குப் பரிவர்த்தனையிலிருந்து வெளிநாட்டு முதலீடுகளின் தேறிய வெளிப்பாய்ல்கள் இருந்தபோதிலும் இது பங்குரிமை முதலீட்டிற்கான உள்நாட்டு முதலீட்டாளர்களின் மேம்பட்ட விருப்பினால் ஆதரவளிக்கப்பட்டது.

**விலைச்சுட்டிகளின் அசைவும் சந்தை மூலதனமாக்கலும்**




*மூலம்:* கொழும்பு பங்குச் சந்தை

**கொழும்புப் பங்கு பரிவர்த்தனையில் வெளிநாட்டுப் பங்கேற்பு**




*மூலம்* : கொழும்பு பங்குப் பரிவர்த்தனை




## நடுத்தரகால
## எறிவுகள்

# நடுத்தரகால பேரண்டப் பொருளாதாரக் கட்டமைப்பு : 2021-2025(அ)

| குறிகாட்டி | அலகு | 2019 (ஆ) | 2020 (இ) | எறிவுகள் 2021 | 2022 | 2023 | 2024 | 2025 |
|---|---|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை (ஈ)** | | | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 2.3 (இ) | -3.6 | 6.0 | 5.2 | 5.8 | 6.5 | 7.0 |
| நடைமுறைச் சந்தை விலைகளில் மொ.உ.உ. | ரூ.பில் | 15.0 (இ) | 15.0 | 16.6 | 18.4 | 20.7 | 23.2 | 26.1 |
| தலைக்குரிய மொ.உ.உ. | ஐ.அ.டொ. | 3,852 (இ)(உ) | 3,682 | 3,873 | 4,092 | 4,420 | 4,784 | 5,178 |
| மொத்த முதலீடு | மொ.உ.உ. இன் % | 26.8 (இ)(ஊ) | 25.2 | 27.5 | 28.0 | 28.5 | 29.0 | 29.5 |
| உள்நாட்டு சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 20.7 (இ)(ஊ) | 18.9 | 23.1 | 24.6 | 26.2 | 27.4 | 28.5 |
| தேசிய சேமிப்புகள் | மொ.உ.உ. இன் % | 24.7 (இ)(ஊ) | 23.9 | 27.3 | 28.2 | 29.0 | 29.8 | 30.5 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | | | |
| வர்த்தக இடைவெளி (ஈ) | மொ.உ.உ. இன் % | -9.5 | -7.4 | -6.2 | -5.5 | -4.6 | -3.7 | -3.5 |
| ஏற்றுமதிகள் | ஐ.அ.டொ.பில் | 11.9 | 10.0 | 12.5 | 14.0 | 15.5 | 17.0 | 18.9 |
| இறக்குமதிகள் | ஐ.அ.டொ.பில் | 19.9 | 16.1 | 17.8 | 19.0 | 20.0 | 21.0 | 23.0 |
| நடைமுறை கணக்கு நிலுவை (ஈ) | மொ.உ.உ. இன் % | -2.2 | -1.3 | -0.2 | 0.2 | 0.5 | 0.8 | 1.0 |
| வெளிநாட்டு அலுவல்சார் ஒதுக்குகள் | இறக்குமதி மாதங்கள் | 4.6 | 4.2 | 3.2 | 3.7 | 4.3 | 4.7 | 5.0 |
| **இறைத் துறை (ஈ)(எ)** | | | | | | | | |
| மொத்த அரசிறை மற்றும் கொடைகள் | மொ.உ.உ. இன் % | 12.6 (ஏ)(ஐ) | 9.2 | 11.8 | 13.0 | 13.5 | 14.3 | 15.1 |
| செலவினம் மற்றும் தேறிய கடன் வழங்கல் | மொ.உ.உ. இன் % | 22.2 (ஏ)(ஐ) | 20.3 | 21.2 | 20.4 | 19.1 | 19.0 | 19.2 |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -3.6 (ஏ)(ஐ) | -7.9 | -3.1 | -1.3 | 0.0 | 1.2 | 2.3 |
| ஆரம்ப நிலுவை | மொ.உ.உ. இன் % | -3.6 (ஏ)(ஐ) | -4.6 | -4.2 | -2.3 | -0.6 | 0.2 | 0.9 |
| திரண்ட இறை நிலுவை | மொ.உ.உ. இன் % | -9.6 (ஏ)(ஐ) | -11.1 | -9.4 | -7.5 | -5.6 | -4.7 | -4.0 |
| மத்திய அரச படுகடன் | மொ.உ.உ. இன் % | 86.8 (ஏ) | 101.0 | 98.0 | 95.0 | 91.0 | 86.0 | 80.0 |
| **நாணயத் துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (ஒ) | % | 7.0 | 23.4 | 21.0 | 12.5 | 12.5 | 12.5 | 12.5 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_{2b}$ இல்) (ஒ) | % | 4.2 | 6.5 | 12.2 | 11.6 | 11.7 | 12.0 | 12.0 |
| ஆண்டுச்சராசரிப் பணவீக்கம் (ஓ) | % | 4.3 | 4.6 | 4.3 | 5.8 | 6.0 | 5.5 | 5.0 |


(அ) அச்சக பதிப்பிற்கு போகும்வரையில் கிடைக்கத்தக்கதாகவிருந்த தகவல்களை அடிப்படையாக கொண்டது
(ஆ) திருத்தப்பட்டது
(இ) தற்காலிகமானது
(ஈ) தரவானது தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது (2010 தள ஆண்டு)
(உ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(ஊ) 2019இல் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் சதவீதமாக மொத்த முதலீடு, உள்நாட்டு சேமிப்புக்கள் மற்றும் தேசிய சேமிப்புக்கள் என்பனவற்றை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் முறையே 27.4%, 21.3% மற்றும் 25.3% ஆக திருத்தியமைத்துள்ளது.
(எ) இறைத்துறை எறிவுகள் நிதி அமைச்சிலிருந்தான உள்ளீடுகளை அடிப்படையாகக் கொண்டவை.
(ஏ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2021 மார்ச்சு 16இல் வெளியிடப்பட்ட 2019 இற்கான திருத்தப்பட்ட மொ.உ.உற்பத்தியின் மதிப்பீடுகளை அடிப்படையாகக் கொண்டது.
(ஐ) நிதியமைச்சின்படி, 2020 இற்கான வரவுசெலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, 2019 இறைத்துறையின் புள்ளிவிபரங்கள் மீள் குறிப்பிடப்பட்டிருந்தன.
(ஒ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஓ) கொ.நு.வி.சுட்டெண் (2013=100) அடிப்படையிலானது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி

# ஆண்டறிக்கையில் வழங்கப்பட்ட நடுத்தரக்கால பேரண்டப்பொருளாதார கட்டமைப்பு...

- **இலங்கைப் பொருளாதாரமானது வளர்ச்சியை நோக்கிய கொள்கை ஆதரவுகளால் ஊக்கமளிக்கப்பட்டு 2021இல் வலுவாக மீட்சியடையுமெனவும் நடுத்தர காலத்தில் உயர் வளர்ச்சி வேகத்தை தக்கவைத்துக் கொள்ளுமெனவும் எதிர்பார்க்கப்படுகின்றது**
  - நாணய மற்றும் நிதியியல் கொள்கை வழிமுறைகளினூடாக மாத்திரம் பொருளாதார மீளெழுச்சியை உறுதிப்படுத்துவதற்கும் வளர்ச்சி உத்வேகத்தினை மீட்டெடுப்பதற்கும் இயலாது
  - இதற்கு அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படும் பரந்தளவிலான பொருளாதார மறுசீரமைப்புகள் அத்தியாவசியமாகின்றன
- **குறுங்காலத்தில் வெளிநாட்டுத் துறை அழுத்தங்களை சிறப்பாக முகாமை செய்வதானது பேரண்டப் பொருளாதார உறுதிப்பாட்டைப் பேணுவதற்கு அத்தியாவசியமானதாகக் காணப்படுகின்ற அதேவேளை படுகடனை உருவாக்காத வெளிநாட்டுச் செலாவணி உட்பாய்ச்சல்களைப் பலப்படுத்துவதற்கான கொள்கைகளை அமுல்படுத்துவதானது நடுத்தர காலத்தில் துறையின் தாக்குப்பிடிக்கும் தன்மையை முன்னேற்றுமென எதிர்பார்க்கப்படுகின்றது**
- **இறைத் துறையானது அரசாங்கத்தின் கொள்கை நிகழ்ச்சிநிரலுக்கிணங்க பொருளாதார நடவடிக்கைகளின் எதிர்பார்க்கப்பட்ட மீட்சியினால் துணைபுரியப்பட்டு நடுத்தர காலத்தில் முன்னேற்றமடையுமென எதிர்பார்க்கப்படுகின்றது**
- **மொத்தக் கேள்வி நிலைமைகள் இயல்புக்குத் திரும்பியதுடன் ஏதேனும் மிகையான கொள்கை தூண்டுதல்களை திரும்பப் பெறுவதற்கான காத்திரமான கொள்கைகளுடன் நடுத்தர காலத்தில் பணவீக்கமானது இலக்கிடப்பட்ட மட்டத்திற்குள் பேணப்படுமென எதிர்பார்க்கப்படுகின்றது**
- **எதிர்பார்க்கப்படும் குறைந்த பணவீக்கச் சூழலானது குறைந்த வட்டி வீத கட்டமைப்பினைப் பேணுவதற்கு உதவக்கூடுவதுடன் சேமிப்பாளர்களுக்கு நியாயமான உண்மை வருவாயை வழங்குகின்ற அதேவேளை தனியார் துறைக்கு நியாயமான செலவில் கொடுகடன் பாய்ச்சல்களை வசதியளிப்பதன் ஊடாக எதிர்பார்க்கப்பட்ட உயர் பொருளாதார வளர்ச்சிக்கு ஆதரவளிக்கும்**

# எறிவுகளுக்கான இடர்பாடுகள்




*மூலம்: சுகாதார மேம்பாட்டுப் பணியகம்*

- **ஆண்டறிக்கை 2020இல் வழங்கப்பட்ட நடுத்தரகால எறிவுகள் 2020 ஏப்பிறல் நடுப்பகுதியில் முடிவெடுக்கப்பட்டன...**
- **எனினும், அதற்குப் பின்னர் கொவிட்-10 நோய்த்தொற்றின் பரம்பல் பாரியளவினால் அதிகரித்து எறிவுகளை பாதிக்கும் தொடர்ச்சியான நிச்சயமற்றதன்மைகளை பிரதிபலித்தது...**
- **ஆகவே, ஆண்டறிக்கையில் காணப்படும் எறிவுகளுக்கு எதிர்வரும் காலப்பகுதியில் திருத்தங்கள் மேற்கொள்ளப்படும் சாத்தியமுள்ளது...**

**மேலும் 2021இன் நடுப்பகுதியில் மீள்தளப்படுத்தப்பட்ட தேசிய கணக்குகளை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது. புதிய தள ஆண்டாக 2015 இருப்பதோடு, தொடர்புடைய விகிதங்கள் மற்றும் பகுப்பாய்வுகளின் மீள் ஆராய்தல் தேவைப்படும்...**




# பிரச்சனைகள் மற்றும் கொள்கைகள்

# பிரச்சனைகள் மற்றும் கொள்கைகள்...

**01** **உற்பத்தித்திறனின் மந்தமான முன்னேற்றம்** இலங்கையில் நீடித்துநிலைத்திருக்கும் பொருளாதார வளர்ச்சிக்கான முக்கிய சவாலொன்றாகத் தொடர்ந்துமிருக்கிறது.

**02** ஏற்றுமதித் துறையை மீண்டெழச் செய்வதற்கும் மரபுசார் சிக்கல்களை தீர்ப்பதற்கும் **நீண்டகாலமாக தாமதிக்கப்பட்ட அமைப்பியல் சீர்திருத்தங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் வேளையில் முன்னுரிமையளிக்கப்பட்ட ஏற்றுமதி ஊக்குவிப்பு இன்றியமையாததாகும்.**

**03** முழுமையாகப் பயன்படுத்தப்படாத உள்ளார்ந்த வாய்ப்புக்களை உற்பத்தித்திறன்மிக்கதொரு வகையில் பூரணமாகப் பயன்படுத்துவதினூடாகப் **பணிகள் ஏற்றுமதிகளை அதிகரிப்பதானது** இலங்கையின் வெளிநாட்டு நடைமுறைக் கணக்குப் பெறுபேற்றினை மேம்படுத்துமொரு பிரதான உபாயமாகத் தொடர்ந்துமிருக்கிறது.

**04** உலகளாவிய நோய்த்தொற்றினால் உருவாக்கப்பட்ட **புதிய இயல்பு வாழ்க்கை முறையில் சுற்றுலாத் துறை செயற்படுவதைப் பேணுவதற்கு** பன்னாட்டு மற்றும் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளைக் கவர்கின்ற **புதுமையான உபாயங்கள்** தேவைப்படுகின்றன.

**05** முதலீட்டாளர் நட்புச்சூழலை துரிதமாக வழங்குவதன் மூலம் **உபாய முதலீடுகளை ஈர்ப்பதற்கான நாட்டின் திறன் மீதான நிபந்தனைக்குட்பட்டு** தென்னாசியாவில் இவ்வகையில் முதலாவதாகவுள்ள **கொழும்புத் துறைமுக நகரமானது** நாட்டிற்கு **பல்வேறு சமூகப் பொருளாதார நன்மைகளைக் கொண்டு வருமென** எதிர்பார்க்கப்படுகின்றது.

# பிரச்சனைகள் மற்றும் கொள்கைகள்...

**06** **கணிசமான வெளிநாட்டு நேரடி முதலீடுகளைக் கவர்வதில்** நாட்டின் தொடர்ச்சியான தோல்வியானது நீண்ட கால நோக்குடன் **நிலையான கொள்கைக் கட்டமைப்பொன்றினைப் பேணுகின்ற வேளையில் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய** அமைப்பியல், நிறுவனசார் மற்றும் கொள்கைசார் தடைகளைக் கோடிட்டுக்காட்டுகின்றது.

**07** பேரண்டப் பொருளாதாரத்தின் உறுதிப்பாட்டை உறுதிசெய்வதற்கும் நீண்டகாலப் பொருளாதார வளர்ச்சி இடையூறுகளைத் தடுக்கும் முகமாகவும் **வெளிநாட்டுப் படுகடனின் உயர் வளர்ச்சியைத் தொடர்ந்து மறுதலையாக்குவதற்கு** வெளிநாட்டு **நடைமுறைக் கணக்கு நிலுவை மற்றும் இறை நிலுவை** ஆகியவற்றை **மேம்படுத்துவது அவசியமாகும்**.

**08** அரசாங்கத்தால் தீர்க்கப்பட வேண்டிய **முக்கிய இறைச் சவால்கள்,** தொடர்ச்சியாகக் காணப்படுகின்ற குறைந்த அரசிறை, விடாப்பிடியான மீண்டெழும் செலவினம், அதிகரித்து வரும் மொத்த நிதியிடலின் தேவைப்பாடுகள் மற்றும் அதன் விளைவான உயர்ந்தளவிலான படுகடன் மட்டம், அத்துடன் அரசிற்குச் சொந்தமான வியாபாரத்தொழில் முயற்சிகளின் நிதியியல் செயலாற்றத்தினை மேம்படுத்துவதற்கான தேவை ஆகியவற்றை உள்ளடக்குகின்றன.

**09** **குடித்தொகையின் பின்தங்கிய பிரிவுகள் மீது கொவிட்-19 நோய்ப்பரம்பல் ஓர் விகிதாசாரமற்ற தாக்கத்தைக்கொண்டு** வருமானம் தொடர்பானவை மட்டுமின்றி குறுங்காலத்தில் சமூகப்பொருளாதார நலனையும் நீண்ட காலத்தில் உற்பத்திறனையும் பாதிக்கும் ஏனைய விடயங்கள் தொடர்பான சமமின்மைகளை மோசமாக்கியுள்ளது என்பதனை எதிர்வரும் காலத்தில் மேற்கொள்கிற **கொள்கைத் திருத்தங்கள் கருத்திற்கொள்ளவேண்டும்.**

# பிரச்சனைகள் மற்றும் கொள்கைகள்...

**10** உணவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கும் வெளிநாட்டுத் துறை அழுத்தங்களைத் தளர்த்துவதற்கும் இலங்கையில் **உணவில் தன்னிறைவினை அதிகரிப்பது** அத்தியாவசியமாகின்ற வேளையில், அதிகரித்த வேளாண்மை உற்பத்தியினூடாகப் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும். (சிறப்புக்குறிப்பினைப் பார்க்கவும்)

**11** கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றானது **தொழிற்படையின் பலவீனங்கள் மற்றும் பாதிப்படையக்கூடிய தன்மைகளை** எடுத்துரைப்பதுடன் உயர் வருமானப் பொருளாதாரமொன்றாக நாட்டின் நிலைமாற்றலுக்குப் பங்களிப்புச் செய்யக்கூடிய **தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மை மற்றும் இயலாற்றலுடைய தொழிற்படையின்** உருவாக்கத்திற்கு வழியமைப்பதற்கு **ஊழியச்சந்தை சீர்த்திருத்தத்திற்கான அவசரத் தேவையையும்** வலியுறுத்துகின்றன.

**12** **அனைத்தையும் உள்ளடக்கிய மற்றும் நீடித்து நிலைத்திருக்கும் வளர்ச்சியை தோற்றுவிப்பதற்காக நுண்பாக, சிறிய மற்றும் நடுத்தரளவு தொழில்முயற்சிகள்** இன்றியமையாதவை என்ற பரவலான அங்கீகாரமுள்ளமையானது இப்பிரிவினை முன்னேற்றுவதற்கு தனித்துவமான கொள்கைத் தலையீடுகளை வகுக்க வேண்டிய அவசியத்தை கோடிட்டுக் காட்டுகின்றது.

**13** நிலவும் தாழ்ந்த பணவீக்கம், தாழ்ந்த வட்டி வீதச்சூழலில் பொருளாதாரத்தில் வளர்ந்து வரும் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு **இலங்கையின் நிதியியல் துறையானது துரிதமாக பரிணாமடைய வேண்டியுள்ளது.**

# பிரச்சனைகள் மற்றும் கொள்கைகள்...

**14** நாட்டின் வட்டி வீத கட்டமைப்பு ஒற்றை இலக்க மட்டத்தில் தொடர்ந்தும் இருக்குமென எதிர்பார்க்கப்படுவதனால், **பல்வேறு நேர்மையற்ற தரப்பினர்களினால் ஊக்குவிக்கப்படும் சலுகைகள் மற்றும் சந்தர்ப்பங்கள் தொடர்பில் பொதுமக்கள் அதிக விழிப்புணர்வுடன் இருப்பது அவசியமாகும்.**

**15** உலகளாவிய நோய்த்தொற்றினால் ஏற்பட்ட எதிர்பாராத சூழ்நிலைகளுடன் **டிஜிட்டல் கொடுப்பனவுப் பயன்பாட்டு முறைகள்** துரிதப்படுத்தப்பட்ட போதிலும், **வேகமாக வளர்ந்து வரும் தொழில்நுட்பமானது நிதியியல் துறையின் ஆர்வலர்களின்** தயார்நிலையையும் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்கு பொது மக்களிடையே **நிதியியல் அறிவினை மேம்படுத்துவதையும்** தேவைப்படுத்துகின்றது.

**16** **இலங்கையில் சுற்றுச்சூழல் பிரச்சனைகள்** கணிசமான பேரண்டப் பொருளாதாரத் தாக்கங்களை அதிகரித்தளவில் ஏற்படுத்துவதுடன், நீடித்து நிலைத்திருக்கும் அபிவிருத்திக் கொள்கை கட்டமைப்பிற்கான முக்கியத்துவத்தையும் எடுத்துக்காட்டுகின்றன.

**17** **தகவலை அடிப்படையாகக் கொண்ட சமூகங்களில் துல்லியமானதும் உரிய நேரத்திலானதுமான தரவுகள் பிரதான வகிபாகத்தை வகிக்கின்ற அதேவேளை** தவறான மற்றும் காலம்தாழ்த்திய தரவுகள் பொதுமக்களின் தவறான கருத்துக்களின் உருவாக்கத்திற்கும் பொருளாதாரம் மற்றம் சமூக செலவுகளை உருவாக்கும் கொள்கைத் தவறுகளுக்குப் பிழையாக வழிகாட்டி பொருளாதார முன்னேற்றத்தையும் உறுதிப்பாட்டினையும் பாதிக்கும்.


1950-2020 Stability Sustainability Shared Prosperity




## சிறப்புக் குறிப்புக்கள்

# கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று சூழ்நிலையில் இலங்கையின் உணவுப் பாதுகாப்பு

- கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று காலப்பகுதியில் தீவிரமடைந்த அனேகமான பொருளாதார மற்றும் சமூக கரிசனைகளுக்கு மத்தியில் உள்நாட்டிலும் உலகளாவிய ரீதியிலும் உணவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய பிரச்சனைகளும் கொள்கை வகுப்பாளர்கள், கல்வியாளர் மற்றும் பொது மக்களின் பெருமளவான கவனத்தினைப் பெற்றிருக்கின்றன.

- உலகளாவிய ரீதியாகவும் உள்நாட்டிலும் மேற்கொள்ளப்பட்ட முடக்கல் மற்றும் நகர்வு மீதான கட்டுப்பாடுகள் போன்ற முன்னெப்பொழுதுமில்லாத தடுப்பு நடவடிக்கைகளினால் உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் தடையற்ற உணவு உற்பத்தி மற்றும் விநியோகத்தினை உறுதிப்படுத்த வழிமுறைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் நாட்டின் பொருளாதார நடவடிக்கைகள் சீர்குலைந்து வழங்கல் சங்கிலிகள் மற்றும் மக்களின் வாழ்வாதாரங்களில் தாக்கம் செலுத்தியமையினால் அது உணவுப் பாதுகாப்பிலும் தாக்கத்தினை ஏற்படுத்தியது

### கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்றுக்கு மத்தியில் உணவுப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காகப் பின்பற்றப்பட்ட கொள்கைகள்

- சமூகப் பாதுகாப்பு நிகழ்ச்சித்திட்டங்களை விரிவுபடுத்தல்.
- இலக்கிடப்பட்ட ஊட்டச்சத்து ஆதரவு நிகழ்ச்சித்திட்டங்களைத் தொடர்தல்.
- நிரம்பல் சங்கிலியில் உள்ள ஆர்வலர்கள் தொடர்ந்து சிரமமின்றியிருக்க அவசர நிதித் தேவைகளுக்கு ஆதரவளித்தல்
- அரசாங்கக் கொள்வனவு மற்றும் பொதுப் பகிர்ந்தளிப்புக்கள்
- உள்நாட்டு வேளாண்மையை ஊக்குவித்தல்
- உணவு நிரம்பல் சங்கிலியில் பங்கேற்பாளர்கள் சுகாதார மற்றும் பாதுகாப்பு ஒழுங்குவிதிகளைக் கண்டிப்பாகப் பின்பற்றுதல்

### முன்னோக்கிய பார்வை

- வேளாண்மைத் துறையில் உற்பத்தித்திறன் மட்டத்தினை மேம்படுத்தல்
- சந்தைப்படுத்தல் மற்றும் விநியோக முறைமைகளை மேம்படுத்தல்
- உணவு உற்பத்தித் தரவுத் தளங்கள் நிறுவுதல் மற்றும் பொதுத்துறைப் பகிர்ந்தளிப்பு முறைமைகள் வலுப்படுத்தல்
- குளிர் களஞ்சியப்படுத்தல் உள்ளடங்களாக பண்டசாலை மற்றும் களஞ்சியப்படுத்தல் வசதிகளை மேம்படுத்தல்
- பொருளாதார ரிதியாகப் பாதிக்கப்படக்கூடிய குழுவிற்கு வருமானத்தை உருவாக்குவதற்கான வாய்ப்புகளை இயலுமைப்படுத்திக்கொடுத்தல்
- ஆரோக்கியமான உணவுப் பழக்கங்களையும் ஆரோக்கியமான உணவுத் தெரிவுகளையும் ஊக்குவிப்பதற்கு ஊட்டச்சத்து மற்றும் உணவுப் பாதுகாப்புடன் தொடர்புடைய கொள்கைகளில் பொதுமக்களை அறிவூட்டுதல்

சி.கு2

# மேம்பட்ட உலக தரமிடல்கள்: முதலீட்டாளர்களின் முன்னேற்றத்திற்கான படிக்கல்

***முதலீட்டிற்கும் சேமிப்புக்கும் இடையிலான தொடர்ச்சியாகக் காணப்பட்ட இடைவெளி, போதுமானளவு வெளிநாட்டு முதலீடுகளைக் கவர்வதில் காணப்பட்ட தோல்வி, இலங்கையின் அபிவிருத்தியை நோக்கிய பயணத்தினை மெதுவடையச் செய்த மிகப்பெரும் தடையாக அடையாளம் காணப்பட்டிருக்கின்றது.***

- முதலீட்டாளர்களைக் கவருவதை மேம்படுத்துவதற்குத் தெரிவு செய்யப்பட்ட உலகளாவிய சுட்டெண்களின் பிந்திய தரமிடலினால் சுட்டிக்காட்டப்பட்டதனைப் போன்று முன்னுரிமையுள்ள பல முக்கிய துறைகள் அடையாளம் காணப்பட்டிருக்கிறது.

- இச்சுட்டெண்களில் மேம்பாட்டினை அடைவதன் மூலம் போட்டித்தன்மை மீண்டும் கிடைக்கப்பெறும்:
  - வியாபாரம் செய்தல் சுட்டெண்
  - உலகளாவிய போட்டித்தன்மைச் சுட்டெண்
  - ஊழல் உணர்வுச் சுட்டெண்

- கொழும்புத் துறைமுக நகர ஆணைக்குழுவினை நிறுவுவது உலகம் முழுவதிலுமுள்ள முதலீட்டு வாய்ப்புக்களுக்கு நிகராக வியாபாரம் செய்யும் சூழ்நிலையினை வழங்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் முதலீட்டு உட்பாய்ச்சல்களை உயர்த்துவதற்கான வாய்ப்புக்கள் புதிய உச்சமொன்றினை எட்டும்.

முதலீட்டாளர்களைக் கவருவதற்கு மேம்படுத்தப்பட வேண்டிய முக்கிய துறைகள்

- சட்டச் செய்முறைகள்
- அரச கொள்கை
- வரிக் கட்டமைப்பு
- பேரண்டப் பொருளாதார உறுதிப்பாடு
- திறந்த வர்த்தகம்
- தொழிற் சந்தை
- தகவல் தொடர்பூட்டல் தொழில் நுட்பங்களைப் பின்பற்றும் தன்மை
- உட்கட்டமைப்பு வலையமைப்பு

- **இத்துறைகளில் உள்ள பற்றாக்குறைகளைத் தீர்ப்பதற்கான இலக்கிடப்பட்ட மறுசீரமைப்புகள் வெளிநாட்டு அதேபோல உள்நாட்டு முதலீட்டாளர்களின் அதிகரித்த முதலீடுகளை வசதிப்படுத்தும்**

## சி.கு3 கொவிட் -19 உலகளாவிய நோய்த்தொற்றினால் தூண்டப்பட்ட வழமையான பணிகளை வீட்டிலிருந்து மேற்கொள்வதனை நோக்கிய மாறுதல்

***உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் குறிப்பாக, வழமையான வேலைச்சூழலில் பணிகளின் செயலாற்றத்தினைத் முடக்கி, முன்னெப்பொழுதும் இல்லாத தாக்கத்தினை தொழிற்சந்தையில் ஏற்படுத்தியுள்ள நிலையில் வீட்டிலிருந்து பணியாற்றல் என்பது வியாபாரத் தொடர்ச்சிக்கான தற்காலிக நடவடிக்கையாக பெருமளவில் பிரபல்யமடைந்தது...***

| நன்மைகள் | தீமைகள் |
| --- | --- |
| • பயண நேரம், மற்றும் தொடர்புடைய செலவுகள் குறைக்கப்பட்டமை<br>• சிறந்த நெகிழ்வுத்தன்மை,<br>• தொழிற்பாட்டுச் செலவுகள் குறைக்கப்பட்டமை<br>• பெண் தொழிற்படையின் பங்கேற்பை மேம்படுத்துவதற்கான வாய்ப்பாகும்<br>• காபன் வெளியேற்றம், போக்குவரத்து நெரிசல் மற்றும் எண்ணெய் இறக்குமதிகள் குறைவடைந்தமை | • அனைத்து கைத்தொழில்கள், தொழில் வகைகள், வேலைத் தொழிற்பாடுகள் என்பன வீட்டிலிருந்து பணியாற்றுவதன் கீழ் சாத்தியமானதாக அமைவதில்லை<br>• தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப கல்வியறிவு, அதேபோல் பௌதீக ரீதியான செயற்பாடுகள் மற்றும் நடைமுறைகள் போன்றவற்றில் காணப்பட்ட பிரச்சனைகள்<br>• தரவுப் பாதுகாப்புத் தோல்விகளும் அதனுடன் தொடர்புடைய அச்சுறுத்தல்களும் |

அதன் சீரான தொழிற்பாட்டிற்கும் அத்தகைய நடைமுறைகளிலிருந்து விரும்பத்தக்க அனுகூலங்களை அறுவடை செய்வதற்கும் நடைமுறையில் காணப்படும் பிரச்சினைகள், சவால்கள், மற்றும் குறைப்பாடுகளை எடுத்துரைப்பது இன்றியமையாததாகும்.

## சி.கு9 தொழில்நுட்பத்தினைத் பின்பற்றுதல் மற்றும் இணையப் பாதுகாப்பு மீது கொவிட்-19இன் தாக்கங்கள்

***உலகளாவிய நோய்த்தொற்றின் விளைவால் ஏற்பட்ட முடக்கம் மற்றும் தொடர்ந்து இணையவழி குற்றங்களிலன் அதிகரிப்புக்கு மத்தியில் தகவல் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய சேவைகளுக்கான மிகுந்த கேள்விப் பின்னணியில் இணையப் பாதுகாப்பு கவனத்தை ஈர்க்கக்கூடியதாய் அமைந்தது.***

**தகவல் தொழில்நுட்ப சேவைகளுக்கான அதிகரித்த கேள்விகள்**

**இணையவழி தாக்குதல்களின் அதிகரித்த எண்ணிக்கை**

### சவால்களை வெற்றி கொள்வது எப்படி?

- இணைய தாக்குப்பிடிக்கும்தன்மையினை வலுப்படுத்தல்
- தடங்கலற்ற வியாபாரத் திட்டமிடல்
- நவீன இணையப் பாதுகாப்பு தொழில்நுட்பங்களை நடைமுறைப்படுத்துவதற்கு போதிய வரவுசெலவினை ஒதுக்கீடு செய்தல்
- பயன்படுத்துநர் விழிப்புணர்வு


1950-2020 Stability Sustainability Shared Prosperity 70

இதற்கு மேலதிகமாக, ஆண்டறிக்கை 2020 உலகளாவிய நோய்த்தொற்றுக் காலப்பகுதியில் மத்திய வங்கியின் தொழிற்பாடுகள் அதேபோல அதிகாரிகளால் பின்பற்றப்பட்ட வழிமுறைகள் தொடர்பில் விளக்கங்களை வழங்குகிறது.

- ***சி.கு. 10:*** **முக்கிய பொருளாதாரக் கொள்கை வழிமுறைகள்**
    - நாணயக் கொள்கை
    - சிறப்புக் கடன் திட்டங்கள்
    - நிதியியல் துறை
    - பணம் தூயதாக்கலுக்கெதிரான மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியளித்தலை ஒழித்தல்
    - வெளிநாட்டுச் செலாவணி முகாமைத்துவம் மற்றும் பன்னாட்டுத் தொழிற்பாடுகள்
    - விலைத் திருத்தங்கள்
    - வரித் திருத்தங்கள்
    - இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாடுகள் திணைக்களத்தின் ஒழுங்குவிதிகள்
    - அரச செலவினம்
    - படுகடன் முகாமைத்துவம்
- ***பகுதி II: இலங்கை மத்திய வங்கியின் கணக்குகளும் தொழிற்பாடுகளும்***
- ***பகுதி III:*** ஆண்டுப்பகுதியில் அரசாங்கத்தினாலும் நாணயச்சபையினாலும் இலங்கை மத்திய வங்கி மற்றும் வங்கித்தொழில் நிறுவனங்களின் நடைமுறைகள் மற்றும் தொழிற்பாடுகள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட **முக்கிய நிருவாக வழிமுறைகள்**

நன்றி

# பேரண்டப் பொருளாதாரச் செயலாற்றம் (2016-2020)

| குறிகாட்டி | அலகு | 2016 | 2017 | 2018 | 2019 (அ) | 2020 (ஆ) |
|---|---|---|---|---|---|---|
| **உண்மைத்துறை (இ)** | | | | | | |
| உண்மை மொ.உ.உ. வளர்ச்சி | % | 4.5 | 3.6 | 3.3 (அ) | 2.3 (ஆ) | -3.6 |
| நடைமுறைச் சந்தை விலையில் மொ.உ.உ. | ரூ.பில் | 11,996 | 13,328 | 14,291 (அ) | 15,013 (ஆ) | 14,973 |
| தலைக்குரிய மொ.உ.உ. (ஈ) | ஐ.அ.டொ. | 3,886 | 4,077 | 4,057 (அ) | 3,852 (ஆ) | 3,682 |
| **வெளிநாட்டுத்துறை** | | | | | | |
| வர்த்தக நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -10.8 | -11.0 | -11.8 (அ) | -9.5 | -7.4 |
| நடைமுறை கணக்கு நிலுவை (இ) | மொ.உ.உ. இன் % | -2.1 | -2.6 | -3.2 | -2.2 | -1.3 |
| திரண்ட நிலுவை | ஐ.அ.டொ.மில் | -500 | 2,068 | -1,103 | 377 | -2,328 |
| வெளிநாட்டு அலுவர்சார் ஒதுக்குகள் | ஐ.அ.டொ.மில் | 6,019 | 7,959 | 6,919 | 7,642 | 5,664 |
| **இறைத்துறை (இ) (உ)** | | | | | | |
| நடைமுறை கணக்கு நிலுவை | மொ.உ.உ. இன் % | -0.6 | -0.7 | -1.2 | -3.6 (ஊ) | -7.9 |
| ஆரம்ப நிலுவை | மொ.உ.உ. இன் % | -0.2 | 0.02 | 0.6 | -3.6 (ஊ) | -4.6 |
| திரண்ட இறை நிலுவை | மொ.உ.உ. இன் % | -5.3 | -5.5 | -5.3 | -9.6 (ஊ) | -11.1 |
| மத்திய அரச படுகடன் (எ) | மொ.உ.உ. இன் % | 79.0 | 77.9 | 84.2 | 86.8 | 101.0 |
| **நாணயத்துறை மற்றும் பணவீக்கம்** | | | | | | |
| விரிந்த பண வளர்ச்சி ($M_{2b}$) (ஏ) | % | 18.4 | 16.7 | 13.0 | 7.0 | 23.4 |
| தனியார் துறைக்கான கொடுகடனின் வளர்ச்சி ($M_{2b}$ இல்) (ஏ) | % | 21.6 | 14.7 | 15.9 | 4.2 | 6.5 |
| ஆண்டுச் சராசரிப் பணவீக்கம் (ஐ) | % | 4.0 | 6.6 | 4.3 | 4.3 | 4.6 |

(அ) திருத்தப்பட்டது
(ஆ) தற்காலிகமானது
(இ) தரவானது தொகை மதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் மொ.உ.உ. மதிப்பீடுகளை (அடித்தள ஆண்டு 2010) அடிப்படையாகக் கொண்டது
(ஈ) அண்மைய குடித்தொகை எண்ணிக்கைகளுடன் புதுப்பிக்கப்பட்ட மதிப்பீடுகள்
(உ) தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் 2021 மார்ச்சு 16 கிடைக்கப்பெற்ற 2018 மற்றும் 2019ற்கான திருத்தப்பட்ட மொத்த உள்நாட்டு உற்பத்தி மதிப்பீடுகளின் அடிப்படையிலானவை
(ஊ) நிதியமைச்சின்படி, 2020 இற்கான வரவுசெலவுத் திட்ட உரையில் அறிவிக்கப்பட்டதிற்கிணங்க 2019 இறைத்துறையின் புள்ளிவிபரங்கள் மீள்குறிப்பிடப்பட்டிருந்தன.
(எ) 2013 மார்ச்சில் சிறிலங்கன் எயர்லைனசிற்கு முதலீடு வழங்குவதற்காக வழங்கப்பட்ட ரூ. 13,125 மில்லியன் (2018 யூன் 01 முதிர்ச்சியானது) மற்றும் 2012 சனவரியில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு வழங்கிய ரூ. 78,441 மில்லியன் (இதில் ரூ. 21,778 மில்லியன் 2017 சனவரி 01 அன்று முதிர்ச்சியானதுடன் தற்போதைய வெளிநின்ற தொகை ரூ. 56,662 மில்லியனதாகும்) என்பவை உள்ளடங்கலாக.
(ஏ) ஆண்டிறுதி பெறுமதிகளின் அடிப்படையிலான ஆண்டுக்காண்டு வளர்ச்சி
(ஐ) கொ.நு.வி.சுட்டெண்ணை (2013=100) அடிப்படையாகக் கொண்டது

*மூலங்கள்:* தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்
நிதி அமைச்சு
இலங்கை மத்திய வங்கி



1950-2020 Stability Sustainability Shared Prosperity

## கொவிட்-19 உலகளாவிய நோய்த்தொற்று உலகளாவிய பொருளாதாரத்திற்கும் உலக வர்த்தகத்திற்கும் முன்னெப்பொழுதுமில்லாத இடையூறுகளைத் தோற்றுவித்தமையானது இம்மோசமான தாக்கங்களைத் தணிப்பதற்குப் பல்வேறு வழிமுறைகளை எடுப்பதற்கு அரசாங்கத்தினைத் தூண்டின...

- அரசாங்கம், இறக்குமதிகளுக்கான மாற்றீடுகளையும் ஏற்றுமதிகளையும் ஊக்குவிக்கக்கூடியதுமான அபிவிருத்திகளூடாக உள்நாட்டு உற்பத்திகளுக்கு ஆதரவளிக்கின்ற வர்த்தகக் கொள்கையின் மீது கவனம் செலுத்தியது.
- இறக்குதிக் கட்டுப்பாடுகளுக்குட்பட்டுள்ள பொருட்கள் மீதான செலவினத்தில் ஏற்பட்ட குறைப்பு 2019இன் தொடர்பான காலப்பகுதியுடன் ஒப்பிடுகையில் 2020 ஏப்பிறலிலிருந்து திசெம்பர் வரையான காலப்பகுதியில் ஏற்பட்ட ஒட்டுமொத்த இறக்குமதிச் செலவினத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியின் ஏறத்தாழ 36 சதவீதத்திற்கு (ஏறத்தாழ ஐ.அ.டொலர் 1.3 பில்லியன்) வகைகூறியது.
- 28 ஆண்டுகள் கடந்த பின்னர் 2020 செத்தெம்பரில் நடைபெற்ற அமைச்சர்களின் ஏற்றுமதி அபிவிருத்தி குழுக் கூட்டத்திற்கு மேதகு சனாதிபதி அவர்கள் தலைமை தாங்கினார்.

### முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கைகளுக்கு கீழான இலங்கையின் ஏற்றுமதிகள்

| முன்னுரிமை உடன்படிக்கை | 2019 | 2020 (அ) | | |
|---|---|---|---|---|
| | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | பெறுமதிகள் (ஐ.அ.டொ. மில்லியன்) | வளர்ச்சி (%) | பங்கு (%) |
| முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை (ஜிஎஸ்பி) | 4,020.0 | 3,671.8 | -8.7 | 83.1 |
| இதில் ஐரோப்பிய ஒன்றியம் (முன்னுரிமைகளின் பொதுவாக்கப்பட்ட முறைமை + உள்ளடங்கலாக) (ஆ) | 2,766.3 | 2,597.9 | -6.1 | 58.8 |
| ஐக்கிய அமெரிக்கா | 709.4 | 585.7 | -17.4 | 13.2 |
| ருசிய கூட்டாட்சி (இ) | 150.3 | 142.2 | -5.4 | 3.2 |
| துருக்கி | 85.3 | 80.3 | -5.9 | 1.8 |
| அவுஸ்திரேலியா | 89.7 | 79.2 | -11.8 | 1.8 |
| யப்பான் | 84.9 | 71.0 | -16.4 | 1.6 |
| கனடா | 73.5 | 61.0 | -17.0 | 1.4 |
| ஏனைய முன்னுரிமைகளில் பொதுவாக்கப்பட்ட முறைமை | 60.6 | 54.6 | -9.9 | 1.2 |
| 2000 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்தியா-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 489.6 | 358.4 | -26.8 | 8.1 |
| 2006 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட ஆசிய-பசுபிக் வர்த்தக உடன்படிக்கை (ஈ) | 179.3 | 204.7 | 14.2 | 4.6 |
| 1989 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட வர்த்தக முன்னுரிமைகளுக்கான உலகளாவிய முறைமை | 80.5 | 89.5 | 11.2 | 2.0 |
| 2005 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட பாகிஸ்தான்-இலங்கை சுதந்திர வர்த்தக உடன்படிக்கை | 60.8 | 53.0 | -12.8 | 1.2 |
| 2006 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட தெற்காசியா சுதந்திர வர்த்தக பிரதேசம் | 55.9 | 42.2 | -24.4 | 1.0 |
| 1995 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட சார்க் முன்னுரிமை வர்த்தக உடன்படிக்கை | 1.7 | 0.8 | -55.6 | 0.02 |
| முன்னுரிமை உடன்படிக்கையின் கீழான மொத்த ஏற்றுமதிகள் | 4,887.8 | 4,420.4 | -9.6 | 100.0 |
| இலங்கையினுடைய மொத்த வணிகப்பொருள் ஏற்றுமதிகளின் பங்காக | 40.9 | 44.0 | | |


1950-2020 Stability Sustainability Shared Prosperity